193 193

ஸ்ரீ:

# ஸ்ரீரங்கம்
# அத்யயநோத்ஸவ வைபவம்

எழுதி வெளியிட்டது

ஸ்தாநீகம் - பார்த்தஸாரதி அய்யங்கார்
ஸாஹித்ய சிரோமணி
"திருவரங்கம் பெரிய கோயில்" பத்திராதிபர்

முதற் பதிப்பு 1,000

சென்னை:
... அச்சுக்கூடம்', பெரம்பூர் பாரக்ஸ்

1932

விலை அணா 2.

Q22:38.2119 2SR
N32
170855

# அத்யயனோத்ஸவ வைபவம்.

---

## 1. தனுர் மாஸம்.

மார்கழி மாஸம் தேவர்களுக்கு ப்ராமம முஹூர்த்த மான உஷ꞉காலமாய் ஸாத்விக ஸமயமாயுமிருப்பதால் பகவதாராதனத்துக்கு மிகவும் சிறந்தது. இது பக்தர்களின் பாடல் கொண்டு பெருமாளை எழுப்பி மகிழ்ப்பிக்க உசித மான மாஸம். அரிசியும் பருப்பும் கலந்த பொங்கல் ஸாத்விக ஆஹாரமாதலால் அதுவே இம்மாஸத்தில் பெருமாளுக்கு அமுது செய்விக்கத்தக்கது. பனிரண்டு வருஷம் பெருமாளை ஆராதித்ததன் பலமத்தனையும் இந்த ஒரு மாஸத்தில் செய்த ஆராதனத்துக்கே யுண்டு.

### அத்யயனோத்ஸவம்—

இந்த மார்கழி மாஸத்தில் சுக்ல பக்ஷ ப்ரதமை முதல் தசமி முடிய பத்து நாள் பெருமாளுக்கு உத்ஸவம் செய்ய வேண்டும். பக்தர்கள் தமிழ்முதலிய தேசபாஷையில் பாடிய பாடல்களால் பெருமாளை மகிழ்ப்பிக்க வேண்டிய இந்த உத்ஸவத்துக்கு 'அத்யயனோத்ஸவம்' என்றே ஸ்ரீ பஞ்சராத்ரத்தில் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. சுக்ல பக்ஷ ஏகாதசி முதல் கிருஷ்ண பக்ஷ பஞ்சமி முடிய மற்றொரு உத்ஸவம் செய்யவேண்டும். அதற்கு 'மோக்ஷோத்ஸவம்' என்று பெயர். முதல் உத்ஸவம் காலையிலும் இரண்டாம் உத்ஸவம் மாலையிலுமாய்ச் செய்யத்தக்கது. பெருமாளை மண்டபத்திலும் அவரைப் பாடிய பக்தர்களை அவருக்கெதிரிலுமாய் எழுந்தருளப்பண்ணி இவ்விரண்டு உத்ஸவங்களையும் நடத்தவேண்டியது. இரண்டாவதான மோக்ஷோத்ஸவத்துக்காக ஏற்பட்ட மண்டபத்தின் முன் புறத்தில் ஸகல ஜனங்களும் ஸஞ்சரிக்குமாறு உன்னதமானதோர் கொட்டகை போட்டு, மேல்கட்டி, தீபம், பொம்மை முதலியவற்றால் அலங்கரிக்க வேண்டும்.

## உத்ஸவத்தின் உத்பத்தி—

ஆலிலையில் பள்ளிகொண்டிருந்த பெருமாளுடைய ஸங்கல்பத்தால் அவருடைய நாபி கமலத்திலிருந்து ப்ரம்மா உண்டாகி அஹங்காரம் கொண்டபோது, பெருமாளுடைய காதிலிருந்து இரண்டு அஸுரர்களுண்டாய் ப்ரம்மாவைக் கொல்லலானார்கள். அப்பொழுது, பெருமாள்,—"உங்களுக்கு வேண்டிய வரத்தைக் கேளுங்கள்"—என்று சொல்ல, 'உமக்கே நாம் வரம் கொடுக்கிறோம்'—என்று ராக்ஷஸர்கள் சொல்ல, "என்னால் வதிக்கப்பட்டு நீங்கள் ராக்ஷஸர்களாவே பிறப்பீர்கள்"—என்று பெருமாள் திருவுள்ளமாக, "அது கூடாது, ஒரு மாஸம் உம்மோடு சண்டை செய்து நாங்கள் ஸித்தி பெறுவோம்"—என்று ராக்ஷஸர்கள் வேண்டிக்கொண்டனர். இரண்டு ராக்ஷஸர்களும் பெருமாளால் வதிக்கப்பட்டு, அவருடைய திவ்ய ஸ்வரூபத்தையறிந்து பரமபதத்திலேயே இருக்க விரும்பினார்கள். பெருமாள் மார்கழி சுக்ல ஏகாதசியன்று ஸூர்யோதய ஸமயத்தில் உத்தர வாசலைத் திறந்து, அதன் வழியாய் ஸத்ய லோகத்துக்கும் மேலுள்ள பரமபதத்தில் அந்த ராக்ஷஸர்களைச் சேர்த்தார். அங்கு, ஆதிசேஷன்மீது வீற்றிருந்து நித்ய ஸூரிகளால் சூழப்பட்டிருக்கும் பரமபதநாதனுடைய திவ்ய தேஜஸ்ஸை ஸேவித்து பரமாநந்த மடைந்த அவ்விரு ராக்ஷஸர்களும்,—ப்ரம்மா முதலிய யாவரும் பரமபதத்துக்கொப்பாக கோயில்கள் கட்டி, பகவானுடைய அர்ச்சாவதாரத்தை ப்ரதிஷ்டை செய்து, மார்கழி ஏகாதசியன்று தங்களுக்கு பகவான் பண்ணின அனுக்ரஹத்தை உத்ஸவமாகக் கொண்டாடவேண்டும். அன்று உத்தரத்வாரத்தைத் திறந்து வெளியே எழுந்தருளும் பகவானை ஸேவிக்கிறவர்களும் அவரோடுகூட வெளியே வருகிறவர்களும் எத்தனை பாபிகளாயிருந்தாலும் மோக்ஷம் பெறவேண்டும்,—என்று ப்ரார்த்தித்தார்கள்.

Q 22:98:2142 SK NBL

## ஸ்ரீபாஞ்சராத்ர விதி—

பகவான் அப்படியே இசைந்து உத்ஸவம் நடத்த வேண்டிய க்ரமத்தையும் நியமித்தார். அதாவது—மார்கழி சுக்ல ப்ரதமை முதல் 10 நாள் அத்யயனோத்ஸவம். ஏகாதசி முதல் 10 நாள் மோக்ஷோத்ஸவம். ஏகாதசி யன்று உஷ:காலத்தில் நித்ய பூஜையை முடித்துக்கொண்டு பெருமாளை எழுந்தருளப்பண்ணி, உத்தர த்வாரத்துக்கருகில் ச்ரமபரிஹாரமாய் அர்க்யபாத்யாதிகள் ஸமர்ப்பித்து ருக் யஜுஸ் முதலிய வேதங்களாலும் ஸ்தோத்ரங்களாலும் ஸ்தோத்ரம்செய்து உத்தர த்வாரத்தின் வழியாய் கொட்டகைக்குப் போய், பக்த பிம்பங்களுக்கு சந்தனம், மாலை, ஸ்ரீ சடகோபம் முதலியவற்றை அனுக்ரஹித்து மரியாதை செய்த பிறகு,—பெருமாளுக்கு திருவாராதனம் முதலியவற்றை நடத்தி ஏராளமான பக்ஷ்ய வர்கங்களை அமுது செய்விக்க வேண்டியது. மற்றைய நாட்களிலும் இப்படியே ஸாயங்காலத்தில் நடந்து உத்ஸவம் பூர்த்தியாக வேண்டும். இது பக்தர்களுக்கு மோக்ஷப்ரதமான உத்ஸவமாதலால் மோக்ஷோத்ஸவமென்று பகவானே பேர் வைத்தார்.

## ஆழ்வார் ப்ரவேசம்—

மேலே சொன்னது ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில் விதித்த க்ரமம். ஸாமான்யமாய் இதே க்ரமத்தில் திவ்ய தேசந் தோறும் இந்த உத்ஸவம் நடந்துவந்தது. கலியுகத்தில் சேதனர்கள் உஜ்ஜீவிப்பதற்காக ஆழ்வார்களை அவதரிப்பித்து அவர்களுடைய ஸ்ரீஸூக்தியால் பகவான் உபய விபூதியையும் பரிபாலித்து வருகையில், திருமங்கை மன்னன் ஆழ்வார்களில் கடைக்குட்டியாய் அவதரித்தார். அவர் இங்கு ஸ்ரீரங்கத்திலேயே நித்ய வாஸம்பண்ணி நம்மாழ்வாரின் நாலு ப்ரபந்தங்களிலுமுள்ள ரஸ விசேஷங்களை அனுபவித்துக்கொண்டு, அவற்றுக்கு அங்கமாக திருமொழி முதல் திருமடலீறாயுள்ள ஆறு ப்ரபந்தங்களையும் அருளிச் செய்தார். தான் அவதரித்த ஒரு திருக்கார்த்திகை

திவ்ய மஹோத்ஸவத்தில் திருமங்கை மன்னன் தம்முடைய ப்ரபந்தத்தை அழகிய மணவாளன் திருச்செவி சாற்றியருளும்படி தேவகானத்திலேறிட்டு அபிநயிக்க, பெருமாளும் உகந்து திருமங்கை மன்னனுடைய மனோரதத்தை வினவ,—'மார்கழி சுக்ல ஏகாதசி யன்று வேதங்களோடு ஆழ்வாருடைய திருவாய்மொழியைக் கேட்டருளி, திருவாய்மொழிக்கு வேத ஸாம்யம் கொடுத்தருள வேண்டும்'—என்று ப்ரார்த்தித்தார். பெருமாளும் இசைந்து ஆழ்வாருக்குத் திருமுகப் பட்டையம் அனுப்பி அவருக்குக்கரண பூதரான மதுரகவியோடு அவரைத் திருநகரியிலிருந்து எழுந்தருளப்பண்ணி, அவருக்கு நம்மாழ்வாரென்று திருநாமம் சாற்றி, ஏகாதசி யன்று வேதாதிகள் தொடங்கின பிறகு, ராத்ரி ஆழ்வாருக்குக் கரண பூதரான மதுர கவிகள் பாடின திருவாய்மொழியைக் கேட்டருளினார். 10-ம் திருநாள் வேதாதிகளைச் சாற்றுமுறை செய்து ஆழ்வார் திருவாய்மொழியைத் தலைக் கட்டினபடியே பெருமாள் அவரைத் தம் திருவடிகளில் சேர்ப்பித்து அவருக்குத் தம்முடைய மாலை, திருமண் காப்பு முதலியவற்றை அனுக்ரஹித்து விடை யளித்தார்.

## நாதமுனிகள் கல்பித்த கட்டளை—

ப்ரதி ஸம்வத்ஸரமும் இவ்விதமே நடந்துவந்தது. சில காலம் சென்ற பிறகு, கலி தோஷத்தால் ப்ரபந்தங்கள் லுப்தமாயின. ஆழ்வாரும் அத்யயநோத்ஸவத்துக்கு எழுந்தருளவில்லை. மறைந்து கிடந்த வேதங்களை வியாஸ பகவான் உத்தரித்தாப்போல, நாதமுனிகள் ஆழ்வாரைக் 'கண்ணிநுண் சிறுத்தாம்பின்' ப்ரபாவத்தாலும் யோகபலத்தாலும் ஸாக்ஷாத்கரித்து, திவ்ய ப்ரபந்தங்களை லபித்து,—சிஷ்ய ப்ரசிஷ்ய முகத்தாலே அநேக ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அத்யயனாத்யாபகங்களைப் பண்ணிவைத்து, முன்பு போல ஆழ்வார் எழுந்தருளி இங்கு ஸ்ரீரங்கத்தில் அத்யயநோத்ஸவம் நடக்க ஏற்பாடு செய்தார்; மற்றைய ஆழ்வார்களின் ப்ரபந்தங்களையும் ரங்கநாதன் கேட்டருளுவதற்காக

ஸ்ரீபாஞ்சராத்ர விதிப்ரகாரம் பகலில் நடக்கவேண்டிய பகல் பத்தான அத்யயனோத்ஸவத்தில் முதலாயிரத்தையும், திருமொழி திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகங்களையும் ஸேவிக்க ஏற்பாடு செய்தார். சப்த ரஸ ப்ரதானமான இயல்பாவைத் திருவாய்மொழி சாற்றுக்கு மற்றை நாள் இயலாக ஸேவிக்கும்படியாகவும் நாதமுனிகளால் ஏற்படுத்தப்பட்டது.

## உடையவர் கல்பித்த கட்டளை—

இப்படி நாதமுனிகளால் ஒழுங்குபடுத்தப்பட்ட உத்ஸவம் உடையவர் காலத்தில் நம்மாழ்வார் திருநகரியிலிருந்து இங்கு எழுந்தருள ஸௌகரியமில்லாமல் தடைபட்டது. இனி ப்ரதி ஸம்வத்ஸரமும் ஆழ்வாரை ஊரை விட்டு ஊர் எழுந்தருளப்பண்ண முடியாதென்று பார்த்து உடையவர் இவ்விடத்திலேயே நம்மாழ்வாரை ப்ரதிஷ்டை செய்வித்து உத்ஸவத்தை நடத்தினர். அப்பொழுதுதான் எல்லா ஆழ்வார்களும் இங்கு ப்ரதிஷ்டிக்கப்பட்டு, அவர்களும் அத்யயனோத்ஸவத்துக்கு எழுந்தருளுவதென்று உடையவரால் ஏற்பட்டது. உடையவர் விஷயமாய் திருவரங்கத்தமுதனர் அருளிச்செய்த ப்ரபன்னகாயத்ரியான ராமாநுச நூற்றந்தாதியையும் உடையவரே திவ்ய ப்ரபந்தத்தில் இயல்பாவோடு சேர்த்து, அரையர் ஸேவித்துவந்த இயல்பா ஆயிரம் பாசுரத்தையும் அமுதனர் ஸேவித்து ப்ரம்மரதம் வைபவம் பெறும்படியாகவும் உடையவரே கட்டளையிட்டார்.

## பட்டர் நிர்வாஹம்—

உடையவர் அந்திம காலத்தில் பட்டரை யழைத்து, மேல்நாட்டு வேதாந்தியை ஜயித்து நம் தரிசனத்தில் ப்ரவணராக்குமென்றும், கோயில் நிர்வாஹத்தையும் நன்றாய் நடத்துமென்றும், நியமித்துப்போனர். வேதாந்தியைத் தோற்கடிக்க ஸமயம் பார்த்திருந்தார் பட்டர். பட்டருக்கு தர்க்கம், வேதாந்தம், மீமாம்ஸை முதலிய சாஸ்திரங்கள்

நன்றாய்த் தெரியுமென்று வேதாந்தியிடம் சொன்ன தீர்த்த வாஸி ப்ராம்மணன் "பட்டருக்குத் திருநெடுந்தாண்டகம் தெரியும் என்று சொன்னாயில்லையே" என்று பட்டராலேயே திருத்தப்பட்டு, மீண்டும் வேதாந்தியிடம் போய்ச் சேர்ந்தான். பட்டருக்குத் திருநெடுந்தாண்டகம் தெரியும் என்று கேள்வியுற்று திடுக்கிட்டுக்கிடந்த வேதாந்தி "அந்தப் பேருக்குத்தானே அர்த்தம் தெரியவில்லை" என்று கவலைப்பட்டிருந்தார். திருமங்கை மன்னன் விஷ்ணு பரத்வத்துக்குப் பூண் கட்டியதுபோல அருளிச்செய்த திருநெடுந்தாண்டகத்தின் அர்த்தங்களைக்கொண்டே பட்டர் வேதாந்தியைத் தோற்கடித்து "நஞ்சீய"ராக்கி நம் தரிசனத்துக்கும் நிர்வாஹகராக்கினார். நஞ்சீயரை ஜயித்து அத்யயநோத்ஸவத்துக்கு முதல் நாள் திரும்பிவந்த பட்டர் திருநெடுந்தாண்டகத்தைக் கொண்டு ஜயித்ததைப் பெருமாளிடம் விண்ணப்பம் செய்ததால் திருநெடுந்தாண்டகமே அத்யயநோத்ஸவத்துக்குத் தொடக்கமாய் பட்டர் காலம் முதல் நடைபெறுகிறதென்று பாரம்பரையாகக் கேள்வி.

## மணவாளமாமுனிகள் கல்பித்த கட்டளை—

இப்படி பாசுரங்களை மட்டும் ஸேவித்துவந்த கோயிலில் இப்பொழுது வியாக்யானமும் ஸேவிக்கப்படுகிறது. இந்த வியாக்யானம் பட்டருடைய சிஷ்ய ப்ரசிஷ்ய ஸந்ததியில் தோன்றிய ஆசார்யர்களுடையது. வியாக்யாதாக்களான ஆசார்யர்களில் நம்பிள்ளையும் அவர் திருவடிகளில் ஆச்ரயித்த பெரியவாச்சான் பிள்ளையும் நம் ஸம்ப்ரதாயத்துக்கு சிரோபூஷணம். இவர்களுக்குப் பின்னுள்ள பிள்ளை லோகாசாரியரும் மணவாளமாமுனிகளும் இவர்களின் வியாக்யானத்தைப் பரவச் செய்தவர்கள். நம்பிள்ளையின் வியாக்யானமான "ஈடு" முப்பத்தாறாயிரப்படி.

முப்பத்தாறாயிரப் பெருக்கராய், மாறன் மறைப் பொருளை மாநிலத்தோர் தேறும்படி யுரைக்கும் சீறுடையராய், சடகோபன் தண்டமிழ் நூல் வாழவும், அதன் மூல

மாய் அரங்கநகர் வாழவும், அதன் காரணமாய் அடியார்கள் வாழவும், இம்மூன்றினாலும் கடல்சூழ்ந்த மண்ணுலகம் வாழவும் வந்த மணவாளமாமுனிகள் பெருமாளுக்கு ஆசாரியராயிருந்து திவ்ய ப்ரபந்தங்களின் வியாக்யானங்களைக் காலக்ஷேபம் ஸாதித்தருளினார். அதுமுதல் வியாக்யானங்களைப் பெருமாள் முன்னிலையில் ஸேவிப்பதும் உத்ஸவத்தில் சேர்ந்தது. மணவாளமாமுனிகளுக்கு முன்பு பாசுரங்கள் இசை அபிநயங்களோடு மட்டுமே பெருமாளிடம் பாடப்பட்டன. பரம்பரையாக பூர்வாசார்யர்கள் உபதேசித்த அர்த்தங்களையும் சொல்லி மணவாளமாமுனிகளுக்கு முன்னிருந்த அரையர்களே பெருமாள் முன்னிலையில் பாசுரங்களை ஸேவித்ததாக வைத்துக்கொண்டாலும், நம்-பிள்ளையும் பெரியவாச்சான் பிள்ளையும் பூர்வாசார்யர் உபதேசித்த அர்த்தங்களையே ஒரு கோவையாக்கி க்ரந்தமாய் ஏற்படுத்திய பிறகு, அவர்களுடைய க்ரந்தங்களே பெருமாள் முன்னிலையில் வரி தவிராமல் ஸேவிக்கப்படுவது— அந்த க்ரந்தங்களையே மணவாளமாமுனிகள் பெருமாளுக்கு காலக்ஷேபமாய் ஸாதித்த காலம் முதல் ஏற்பட்டது. முதலாயிரத்துக்கும் திருமொழிக்கும் பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானமும் திருவாய்மொழிக்கு நம்பிள்ளையின் ஈடும், ஆங்காங்குள்ள அர்த்த விசேஷங்களை ஒன்றுசேர்த்து அரையர் ஸந்ததியாரான தம்பிரான்மார் ஸாதித்த வியாக்யானமும் தான் 'இங்கு ஸேவிக்கப்படுகின்றன. மணவாளமாமுனிகள் ஆதரித்த வியாக்யானங்கள் தவிர வேறு வியாக்யானம் பிற்காலத்தி லேற்பட்டிருந்தாலும், அவருக்கு முன்பே ஏற்பட்டதாகச் சொன்னாலும், அவற்றுக்கு நம்-பெருமாள் ஸந்நிதியில் ப்ரவேசமே கிடையாது.

## 2. திருநெடுந்தாண்டகம்.

இது அத்யயனேத்ஸவத்துக்கு முதல் நாள் ராத்ரி நடக்கும் உத்ஸவம். க்ஷீரான்னத்துக்கு முன்பு பெருமாள் சாற்றிக்கொள்ள வேண்டிய ஸரம் மாலைகள் இன்று அரையர் எழுந்தருளின பிறகுதான் சாற்றப்படுமாகையால், பெரிய அவஸர காலத்தில் சாற்றிக்கொண்ட மாலையோடு தான் பெருமாள் க்ஷீரான்னம் அமுது செய்வார். பிறகு ஸேவார்த்திகளுக்கு ஸேவை கிடையாதாகையால் கர்பக்ருஹம் சாற்றப்பட்டு ஸந்நிதி வாசலிலும் திரை ஸமர்ப்பிக்கப் பட்டிருக்கும்.

ஸந்நிதி வாசல்காரரும் கோயில் மஹா ஜனம் கைங்கர்ய பரர்களும் அரையர் திருமாளிகைக்குப் போய் அரையர்களை எழுந்தருளப் பண்ணுவார்கள். அரையர்கள் குல்லாய் தரித்துக்கொண்டு காப்பந்தம், திருச்சின்னம் முதலிய பரிகரங்களோடு புறப்பட்டு, முதலில் உடையவர் ஸந்நிதி, திருவரங்கப்பெருமாளரையர் எழுந்தருளி யிருப்பதால் பார்த்தஸாரதி ஸந்நிதி, கடைசியாய் நம்மாழ்வார் ஸந்நிதி, இம்மூன்று ஸந்நிதிகளுக்கும் போய் ஸேவித்து, மரியாதையும், அனுக்ரஹமும், தாளத்தைக் கொடுத்து வாங்கி நியமனமும் பெற்றுக்கொண்டு, உள்ளே போய் ஸந்நிதி வாசலில் ஜயவிஜயாளுக்கெதிரே எழுந்தருளியிருப்பார்கள்.

உடனே பெருமாளுக்கு ஸரம் மாலை சாற்றும்படி மணியக்காரர் நியமிப்பார். பெருமாளுக்கும் உபய நாச்சிமார்களுக்கும் ஸரம் மாலை சாற்றி தேங்காய்த் துறுவலும் அமுது செய்வித்த பிறகு, மணியக்காரரின் நியமனத்தின் பேரில் ஸந்நிதி வைஷ்ணவனால் ஸந்நிதித் திரை வாங்கப் படும். மணியக்காரர் அரையர்களை உள்ளே எழுந்தருளப் பண்ணுவார். அவர்கள் கர்ப க்ருஹத்துக்குள் போவார்கள். அப்பொழுது அங்கு வந்திருக்கும் ஸ்தலத்தார் முதலிய ஆசாரிய புருஷர்களும் மற்றைய ஸ்ரீ வைஷ்ணவர்களும் ஸந்நிதிக்குள் போய் அமுது பாறைக்கு இருபுறத்திலும் கோஷ்டியாய் நிற்பார்கள். உள்ளேயிருக்கும்

ஸ்தாநீகர் மணியக்காரரையும் அர்ச்சகரையும் கேட்டுக் கொண்டு அரையர்களுக்கு அருளிப்பாடு ஸாதிப்பார்.

"அருளிப்பாடு—
கோயிலுடைய பெருமாளரையர்,
வரந்தரும் பெருமாளரையர்,
மதியாத தெய்வங்கள் மணவாளப் பெருமாளரையர்,
நாத விநோத அரையர்."

என்ற நாலு அருளிப்பாட்டில் முன்னிரண்டு அல்லது பின்னிரண்டுதான் ஸேவிப்பது வழக்கம். அருளிப்பாடு இரண்டேயானாலும் இம்மாதிரி விசேஷ ஸந்தர்பங்களில் அரையர்கள் நால்வர் வருவதுண்டு. ஒவ்வொரு அரையரின் தாளத்தையும் ஸ்தாநீகர் வாங்கி அர்ச்சகரிடம் கொடுக்க, அவை பெருமாள் திருவடியில் வைக்கப்படும். நாலு அரையர்களுக்கும் ஸ்தாநீகர் தீர்த்தம் சந்தனம் ஸாதித்து, பெருமாளுடைய கைலியும் பெரிய பெருமாளுடைய வேஷ்டியுமாய்ச் சேர்த்து கட்டப்பட்ட தொங்கு பரிவட்டங்களை இரண்டு அரையர்களுக்குக் கட்டி, நால்வருக்கும் மாலை ஸாதிப்பார். நாலு அரையருக்கும் அர்ச்சகர் ஸ்ரீசடகோபம் ஸாதித்தவுடன் ஸ்தாநீகர் தாளங்களை வாங்கிக் கொடுத்துவிடுவார்.

அரையர்கள் கர்ப க்ருஹத்தில் மேல்புறமாய் நின்று கொண்டு,—"பொங்குசீர் வசனபூடண மீந்தவுலகாரியன்
போற்றிடத் திகழும் பெருமாள்;
போதமணவாளமாமுனி ஈடுரைப்பது கேட்டு
பூரித்துநின்ற பெருமாள்."

என்றது முதலான கொண்டாட்டங்களை ஸேவித்து திருநெடுந்தாண்டகம் முதல் பாட்டு 'மின்னுருவாய்' என்பதைப் பல தடவையும் இசையில் ஸேவிப்பார்கள். இப்படி ஸேவித்து முடிந்ததும், பெருமாள் அமுது செய்த தேங்காய்த் துறுவல் அரையர்களாலேயே கோஷ்டிக்கு விநியோகம் செய்யப்படும்.

பிறகு, ஸ்தலத்தார் முதலானோர் வெளியே வந்து சந்தன மண்டபத்தில் கோஷ்டியாயிருப்பார்கள். அரையர்களும் வெளியே வந்து ஸந்நிதி கருடனுக்கு முன்பாக, பெருமாளைப் பார்த்த வண்ணமாய் கொண்டாட்டங்களை ஸேவித்து, "மின்னுருவாய்" பாசுரத்தை இசையில் பாடி அபிநயிப்பார்கள். அபிநய ஸமயத்தில் கோஷ்டி எழுந்து நின்று அது முடிந்தவாறே உட்கார்ந்துவிடும். இனி திருநெடுந்தாண்டகத்துக்கு வியாக்யானம் நடைபெறும். வியாக்யானமாவது—பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானம். பாசுரங்களைப்போல வியாக்யானங்களையும் அரையர்கள் ஸ்வாதீனப்படுத்தி யிருப்பதால் புஸ்தகம் பாராமலே ஸாதிப்பார்கள். ஒரு அரையர்தான் வியாக்யானம் ஸேவிப்பது. மற்றொருவர் கையில் ஸ்ரீகோசத்தை வைத்துக்கொண்டு கவனிப்பார். வியாக்யானம் ஸேவிப்பதுதான் அரையர் ஸேவையில் மிகச் சிறந்தது. அரையர்கள் அர்த்த ஸந்தர்ப்பத்துக்குத் தக்கபடி வியாக்யான வாக்யங்களை நிறுத்தியும் நீட்டியும் ஸேவிக்கும் ரஸமொன்றிலேயே கோஷ்டியும் பெருமாளும் ஆழ்ந்துவிடுவார்கள். திருநெடுந்தாண்டகம் முதல் பாசுரத்துக்குமட்டும் பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானம் ஸேவிக்கபபடும். இந்த வியாக்யானம் முடிந்ததும், திருமங்கை மன்னன் தம்முடைய திருவாராதனக்காரர் மூலமாய் வேஷ்டியம், சந்தனம், ஸம்பாவனை முதலியவற்றையனுப்பி தமக்கு ப்ரதிநிதியாய் பெருமாள் முன்னிலையில் தம்முடைய பாசுரங்களை விண்ணப்பித்த அரையர்களை பஹுமானிப்பார். அதை அரையர்கள் கோஷ்டிக்குக் காட்டி எடுத்துக்கொள்வார்கள். வியாக்யானத்தின் முடிவில் அந்தந்த ஆழ்வார்கள் அல்லது அவர்களின் அருளிச்செயலில் ஸர்வாதிசயமாய் ஆழ்ந்துள்ள ஆசாரியர்கள் அனுப்பும் பஹுமானத்தையும் அரையர் இவ்விதமாகவே ஸ்வீகரிப்பது வழக்கம். பிறகு, திருநெடுந்தாண்டகம் முதல் பாட்டிலிருந்து 11-வதான 'பட்டுடுக்கும்' முடிய தம்பிரான்படி ஸேவித்து உத்ஸவம் பூர்த்தியாகும்.

உடனே, அலங்காரம் (தோசை, வடை) வரும். அது பெருமாளுக்கு அமுது செய்விக்கப்பட்டு ஸந்நிதி வாசலில் பாவாடை போட்டு கோஷ்டிக்கு விநியோகமாகும். வெள்ளிச்சம்பா தளிகை வந்ததும் பெருமாளுக்கு திருவாராதனம். திருவாராதன காலத்தில் ஸந்நிதி வாசலில் திரை ஸமர்ப்பிக்கப்பட்டிருக்கும். திருவாராதனம் முடிந்ததும் வேத விண்ணப்பம், தட்டி (கடதீபம்) முதலியவை ஆகி தளிகை அமுது செய்விக்கப்பட்டு வெளியே இருக்கும் ஸ்தலத்தார் முதலானோர் கோஷ்டிக்கு தீர்த்தாதி விநியோகமும், வெள்ளிச்சம்பா ப்ரஸாத விநியோகமும் நடந்து திருநெடுந்தாண்டக உத்ஸவம் பூர்த்தியாகும்.

---

## 3. திருப்பள்ளி யெழுச்சி.

மார்கழி மாஸம் முழுவதும் ஸூர்யோதயத்துக்கு முன்னதாகவே திருவாராதனம் நடைபெறும். இந்த மாஸத்தில் திருவாராதனத்துக்கு முன்பு காவேரியிலிருந்து திருமஞ்சனம் கொண்டுவருவதில்லை. முதல் நாள் மாலையிலேயே காவேரியிலிருந்துகொண்டுவேரப்பட்ட நிறைகுடமான 'பூர்ண கும்பத்தை' ஸந்நிதிக்கு எதிரில் வைத்து ஸந்நிதிக் கதவு திறக்கப்படும். திருவாராதனம் ஆரம்பிக்கும்போது அரையர் எழுந்தருளி யிருப்பார். சற்று தாமதமானாலும் அவர் எருந்தருளியபிறகுதான் திருவாராதனம் ஆரம்பிக்கப்படும். திருவாராதனத்துக்கு மணி யெடுத்தவுடன், அரையர் குல்லாய் தரித்துக்கொண்டு ஸந்நிதி வாசலில் கிழக்கு முகமாய் உட்கார்ந்து தாளத்தோடு முதலில் திருப்பள்ளி எழுச்சியையும் பிறகு திருப்பாவையையும் ஸேவிப்பார். பாசுரமும் திருவாராதனமும் முடிந்தவுடன், ஸ்தாநீகர் திருவாராதனம் செய்த தீர்த்தம், சந்தனம், பரிவட்டம், மாலை இந்த ஸாமான்களை எடுத்துக்கொண்டு ஸந்நிதிவாசலில் வந்து 'கோயிலுடைய பெருமாளரையர்' என்றது முதலான நாலு அருளிப்பாட்டில் ஏதேனுமொன்றை ஸாதிப்பார். அரையர்

எழுந்துவந்ததும் தீர்த்தம் சந்தனங்களையும், குல்லாய் மேல் பரிவிட்டத்தைத் தொங்கு பரிவிட்டமாயும், மாலையையும் ஸாதித்த பிறகு, அரையர் பெருமாளிடம்போய் ஸ்ரீசடகோபம் வாங்கிக்கொண்டு வெளியே எழுந்தருளி கிழக்குமுகமாய் நின்றவாறே திருப்பாவை சாற்றுமுறை செய்வார்.

சாற்றுமுறை க்ரமம்—

'வங்கக்கடல் கடைந்த' என்ற திருப்பாவை 30-வது பாட்டுதவிர 29-பாட்டுக்கள் ஸேவித்து 29-வதான 'சிற்றஞ்சிறுகாலே' என்ற பாட்டுமட்டும் முன்பு இரண்டு தரம் ஸேவித்து நிறுத்தப்பட்டிருக்கிறது. சில ப்ரபந்தங்களில் கடைசிப் பாட்டுக்கு முன்புள்ளது மட்டும் இரண்டு தரம் ஸேவிக்கப்படுவது வழக்கம். இப்பொழுது அரையர் நாள்பாட்டு ஸேவித்து கடைசீ பாட்டையும் ஸேவிப்பார். நாள் பாட்டாவது—மார்கழி முதல் தேதி முதல் பாட்டு, இரண்டாம் தேதி இரண்டாம் பாட்டு என்ற க்ரமத்தில் அன்றன்றைய நாளுக்கு அந்தந்த பாட்டு. பிறகு பட்டர் எழுந்தருளி வேதவிண்ணப்பம் நடைபெறும். (ஏகாதசியன்று நடக்கும் திருவரங்க வேதபாராயண க்ரமத்தில் இந்த வேதவிண்ணப்பம் விவரிக்கப்படும்.) வேதவிண்ணப்பமானதும், மடப்பள்ளி நெருப்பிலிருந்து ஏற்றப்பட்ட திரிகளுள்ள தட்டியை தேவதாஸி கொண்டுவந்து, பெருமாளுக்கு கடதீபம் காட்டப்படும். திருப்பள்ளியெருச்சி ப்ரஸாதம் அமுது செய்வித்தபிறகு, காவேரியிலிருந்து திருமஞ்சனம் வந்து நித்யப்படி ஏற்பட்ட பால், பொங்கல் வகையராக்களை அமுது செய்விப்பது. இந்த மாஸத்தில் பெருமாளை எழுப்புவதற்கு திருப்பள்ளி எழுச்சி யிருப்பதால், வீணை வாத்தியம் கிடையாது. விச்வரூபம், பஞ்சாங்க ச்ரவணங்களுமில்லை. தினந்தோறும் ஆராதனுங்கமாய் தென்கலையார் பண்ணவேண்டிய வேத பாராயணமும் உபநிஷத்ஸாரமான திருப்பாவை இருப்பதால் கிடையாது.

**திருப்பாவையை மார்கழியில் முதல் ஆராதனத்தில் பெருமாளுக்கு முகோல்லாஸமாய் ஸேவிக்க ஏற்பாடு செய்து திருப்பாவை ஜீய்யரான உடையவருக்கு திருப்பாவை கானத்தோடு பெருமாள் அமுது செய்யும் முதல் ப்ரஸாதம் இம்மாஸம் முழுவதும் அமுது செய்விக்கப்படும்.**

## திருப்பல்லாண்டு தொடக்கம்—

திருப்பள்ளி எழுச்சி யானவுடன் திருப்பல்லாண்டு தொடங்கப்படும். கார்த்திகை மாஸக் கடைசியிலும் பரமபத ஏகாதசி வருமாகையால் அந்த மாஸத்தில் அத்யயநோத்ஸவம் ஆரம்பிக்கும்போது திருப்பள்ளி எழுச்சிக்கு ப்ரஸக்தியில்லை யாகையால், நித்தியப்படி ஏற்பட்ட பொங்கல் அமுதுசெய்த பிறகுதான் திருப்பல்லாண்டு தொடக்கம்.

திருநெடுந்தாண்டகத்தன்று போலவே அரையர்களைத் திருமாளிகையிலிருந்து எழுந்தருளப்பண்ண, அவர்கள் ஸந்நிதி வாசலில் எழுந்தருளுவார்கள். திருநெடுந்தாண்டகத்துக்காக நேற்று ராத்ரியே இவர்கள் உடையவர் ஸந்நிதி முதலிய இடங்களில் ஸேவித்துவிட்டபடியால் இன்று நேராக உள்ளே வருவார்கள். தேங்காய்த் துறுவல் அமுது செய்வித்து திரை வாங்கியதும், மணியக்காரர் அரையர்களை உள்ளே எழுந்தருளப்பண்ண, அவர்கள் உள்ளே வந்து நேற்று திருநெடுந்தாண்டகம் நடந்ததுபோலவே எல்லா காரியமும் நடைபெறும். 'பல்லாண்டு, அடியோமோடும்' என்ற இரண்டு பாசுரங்களையும் இசைதாளத்தோடு ஸேவித்த பிறகு தேங்காய்த் துறுவலை கோஷ்டிக்கு அமுது செய்வித்துவிட்டு அரையர்கள் தம் திருமாளிகைக்கு எழுந்தருளிவிடுவார்கள். பெரிய அவஸரம் திருவாராதனம் நடந்து தளிகையையும் அமுதுசெய்வித்த பிறகு பெருமாள் காலையில் புறப்படுவார்.

———

# 4. பகல் பத்து—முதல் திருநாள்.

உள்ளேயிருந்து புறப்பாடு—

பெரிய அவஸரமானதும் அமுது பாறையில் தங்கத் தோளுக்கினியான் ஸமர்ப்பித்து ஸந்நிதி வாசலில் திரை போடப்படும். பெருமாள் புறப்படுவதை ஜனங்களறிவதற்காக அதிர்வெடி வெடிக்கும் கோயில் மஹா ஜனம் ஸ்தலத்தார்களுக்கும் தர்மகர்த்தாக்களுக்கும் புறப்பாடு ஸமயம் சொல்லி வருவார். பெருமாளைத் தோளுக்கினியானில் எழுந்தருளப்பண்ணி மாலை சாற்றி ஸகலமும் ஸித்தமாகும். ஆழ்வாராசாரியாள் புறப்பட்டு வந்து பகல் பத்து மண்டபத்துக்கெழுந்தருளியதும், நம்மாழ்வார், திருமங்கை மன்னன், உடையவர்—ஆக மூவர் மட்டும் பெருமாளைப் பின்தொடர்ந்து வருவதற்காக மேலப்படியில் காத்திருப்பார்கள். ஸ்தலத்தார்களும் வந்த பிறகு, ஆரியபடாள் வாசலில் பெருமாள் காரியத்தை ஆராய்ந்துகொண்டிருக்கும் மணியக்காரர் பட்டை யடித்து வழி விலக்கும் கோயில் மஹா ஜனங்களோடு மேலப்படி வந்து "சேவி" என்று கம்பீரமாய் ஆக்ஞாபிக்க, வீரவண்டி சேமக்கலம் முழங்கும். மணியக்காரர் ஸந்நிதி வாசலுக்குப் போனதும், ஸ்தானீகர் ஸ்ரீபாதம்தாங்குவாருக்கு அருளிப்பாடு ஸாதிப்பார். ஸித்தமாயிருக்கும் 16 பேர்களும் "நாயிந்தே, நாயிந்தே" என்று சொல்லிக்கொண்டு வரிசையாய் உள்ளே எழுந்தருளுவார்கள். 'தாஸநம்பி' என்ற பெரிய பந்தம் இரண்டு வந்ததும், ஸ்தானீகர் திருகாப்புச் சேர்த்து சங்கிலி போட்டு, திரையை ஓரமாய் ஒதுக்கி, ஸ்ரீபாதம் தாங்குவாரைக் கேட்டுக்கொண்டு ப்ரதக்ஷிணமாய் வந்து, ஸ்ரீபாதம் தாங்குவார் பெருமாளை எழுந்தருளப் பண்ணியதும் கதவைத் திறந்து, தோளுக்கினியானைப் பிடித்துக்கொள்வார்.

இந்த திருநாள் முழுவதும் நாளுக்கொரு விதமான கபாயும், கிரீடம் அல்லது குல்லாய், சவரிமுடி இவற்றில் ஏதேனும், அடுக்குப் பதக்கங்களும், செங்கழுநீரும் ரோஜாவும், கதிர்ப்பச்சையும் சேர்த்துக் கட்டிய திருக்குழல் கற்றை யென்ற குடுமிப்பூவும் மாலையும் சாற்றிக்கொண்டு புறப்படும் பெருமாளுக்கு வேத்ரபாணிகளான சாத்தாத ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒருவருக்குப் பின்னொருவராய் ஒருவர் ஸம்ஸ்கிருதத்திலும் ஒருவர் தமிழிலுமாய்,

"மன்னியசீர் மணவாளமாமுனியீடுகந்து
பின்னொரு ஸ்ரீசைலேச எனப் பேசுமரங்கா எச்சரீகை?"

என்றது முதலான கட்டியங்களைச் சொல்லுவார்கள். பெருமாள் ஸந்நிதி வாசலுக்கு வெளியே வந்தவுடன், மேல்புறத்தில் வரிசையாய் நிற்கும் ஸ்தலத்தார் முதலிய ஆசார்ய புருஷர்கள் ஒரே தடவையில் தண்டம் ஸமர்ப்பித்தெழுந்திருப்பார்கள். பெருமாள் துள்ளிக் குதித்து தாவிப் பாய்ந்து மேற்கு முகமாய்த் திரும்பி இரண்டடி போய் நிற்பார். ஸ்தலத்தார் முதலியவர்களுக்கும் மணியக்காரர் கந்தாடை ராமாநுஜ அய்யங்கார்களுக்கும் பரிவட்டம் ஸ்ரீ சடகோபம் மரியாதை யாகி, பெருமாள் படியிறங்கி வடக்கு முகமாய் நின்றதும், வேத்ர பாணி எதிரில் நின்றுகொண்டு "ஆஹோ, ஓஹோ" என்று சொல்ல, "அருளிப்பாடு இசையறியும் பெருமாள் கூட்டத்தார்" என்று ஸ்தா நீகர் ஸாதித்தவுடன் இரண்டு அரையர்கள் எழுந்தருளி, தாளத்தோடு இசை ஸேவித்துக்கொண்டே வருவார்கள். பெருமாள் புறப்பட்டு ஸேனை முதலியாருக்கெதிரில் வந்ததும், அர்ச்சகர் வைஷ்ணவனிட மிருந்து மாலையை வாங்கிப் பெருமாள் திருவடியிலொற்றி ஸேனை முதலியாருக்கு ஸாதித்து, ஸேனை முதலியார் மாலையை மணியக்கார ருக்கு ஸாதிப்பார். இப்படி பெருமாள் ராஜ்யபாரத்தை ஸேனை முதலியாரிடம் ஒப்பித்துத் திரும்பி, கீழப்படியிலிருந்து ஒய்யார நடையில் கிளிமண்டபமேறி வடக்கு முகமாய்த் திரும்பியதும், "சாரீ யோம்" என்று அருளிப்பாடு ஸாதிக்க, நட்டு முட்டு முழங்கி தாஸிகள் தண்டம் ஸமர்ப்பிப்பார்கள். பிறகு, கிளிமண்டபத்தின் கீழண்டை யோரமாய் பெருமாள் பகல் பத்து மண்டபமேறி எதிரிலிருக்கும் துலுக்க நாச்சியார் தம்முடைய நடை யழகு காண்பதற்காக ஒய்யார நடையில் படிக்கட்டு வரைக்கும் போய் நிற்பார்.

துலுக்க நாச்சியார் வேணியம் ஸமர்ப்பித்ததும், அரையர்கள் ஒருவர் மாற்றி யொருவராக ஸாதிக்கும் கொண்டாட்டங்களோடு படியேற்றமாகி, பெருமாள் மண்டப மெழுந்தருளியவாறே திரை போடப்படும். கூட் டம் வெளியே போனதும், பெருமாளைக் கீழே எழுந்தருளப்பண்ணி ஸ்ரீசடகோபம் பெற்றுக்கொண்டு ஸ்ரீபாதம் தாங்குவார், மணியக்காரர் தாஸாம்பி முதலியவர்கள் வெளியே போன பிறகு, பெருமாள் தோளுக்கினியானிலிருந்து ஸிம்மாஸனத்தி லெழுந்தருளுவார். பெரு மாளுக்கு திருவடி விளக்கியதும், இதா கைங்கரியபரர்களை உள்ளே

அனுமதிப்பதற்காக ஊழியப்பாடும், ஸ்ரீபாதம் தாங்குவாருளிப்பாடும் ஆனபிறகு, ஸ்ரீபாதம் தாங்குவார் வந்து தோளுக்கினியானை வெளியே எழுந்தருளப் பண்ணுகையில், "வாங்குடோ" என்று ஆக்ஞையாகி திரை வாங்கப்படும்.

ஆழ்வாராசாரியாள் மரியாதை—

ஆழ்வாராசாரியாளுக்குப் பெருமாள் ப்ரஸாதமான பரிவட்டங்களும் ஸரம் மாலைகளும் வரும். ஸரம் மாலைகளை அர்ச்சகர் பெருமாள் திருவடியில் சாற்றிக் கொடுப்பார். ஸ்தானீகர் அர்ச்சகரைக் கேட்டுக்கொண்டு,—

"திருநாளுடைய பிரான், கலியன், ராமானுசன், பட்டர்பிரான்,
மதுரகவி,—பொய்கை, பூதம், பேயார், சேரன், பாணன்,
தொண்டரடிப்பொடி,—மழிசை, நம்பி, ஆழ்வான்,—
பிள்ளை லோகாசாருக்கருளிப்பாடு."

என்று கம்பீரமாய் ஸாதிப்பார். வைஷ்ணவன் பந்தத்தை யெடுத்துக் கொண்டு எச்சரிகை சொல்ல, ஸ்ரீசடகோபத்தை யெழுந்தருளப் பண்ணிப் புறப்படும் அர்சகரோடு ஸ்தானீகர் ஊழியக்காரர் முதலியவர்கள் ஆழ்வாரிடம் போவார்கள். பெருமாளைப் பின்தொடர்ந்து வந்த நம்மாழ்வாரும் அவருக்கு வலதுகைப்புறத்தில் திருமங்கை மன்னனும், இடதுகைப்புறத்தில் உடையவருமாய் பெருமாளுக்கெதிரில் நின்றுகொண்டே யிருப்பார்கள். மற்றைய பன்னிருவரும் பக்கத்துக்கு ஆறு பேராய் கீழே எழுந்தருளியிருப்பார்கள். ஸ்தானீகர் முதலில் நம்மாழ்வாருக்குத் தொங்கு பரிவட்டமும் மாலையும் ஸாதித்த பிறகு, ஊழியக்காரர் கையில் சந்தனம் சாற்றியதும், அர்ச்சகர் ஸ்ரீசடகோபம் ஸாதிப்பார். மேலே சொன்ன அருளிப்பாட்டு க்ரமத்திலேயே எல்லோரும் மரியாதை பெற்றுக்கொண்டு கீழே இறங்கியதும் ஸ்ரீசடகோபம் பெருமாளிடம் எழுந்தருளப் பண்ணப்படும்.

அரையர் ஸேவை—

கோயில் மஹாஜனம் அரையர்களை எழுந்தருளப்பண்ணி பட்டை யடித்து வழி விலக்கிக்கொண்டு வருவார். அரையர்களுக்கு இங்கு நடக்கும் அருளிப்பாடு மரியாதை முதலிய யாவும் திருநெடுந்தாண்டகத்தன்று போலவே. ஆனால் தாளத்தை வாங்கிக் கொடுப்பது மட்டும் கிடையாது. அரையர் ஆழ்வார்களுக்கு மத்தியில் போய் பெருமாளுக்கெதிரில் நின்றுகொண்டு ஸேவை ஆரம்பிப்பார்கள்.

பாசுரத்தின் விவரம் யாவும் தனியாய் எழுதப்பட்டிருக்கிறது. அங்கு பார்த்துக்கொள்ளவும்.

அரையர் ஸேவை முடிந்தவுடன், கோஷ்டியிலுள்ள அத்யாபகர்களான தென்கலையார்கள் பெருமாளிடம் எழுந்தருள, அர்ச்சகர் அவர்களுக்கு தீர்த்தம் சடகோபம் ஸாதிப்பார்.

**மண்டபத்தில் இதர காரியங்கள்—**

அத்தியாபகர்களுக்கு தீர்த்தம் சடகோபம் ஆனபிறகு, அலங்காரம்—தோசை, வடை, செல்வரப்பம், பொரி—முதலிய ப்ரஸாதம் வந்து, பெருமாளுக்கும், ஆழ்வாராசார்யாளுக்கும் அமுது செய்வித்ததும், பேஷ்கார்களுக்கு மண்டபத்தில் ஸேவை மரியாதை. ஆழ்வாராசாரியாளுக்கு மேலே சொன்ன அருளிப்பாட்டு க்ரமத்திலேயே ப்ரஸாதம் அமுது செய்விக்கப்படும். ஆனால் திருக்கச்சிநம்பி அமுது செய்த பிறகு உடையவர், ஆழ்வான், பிள்ளை லோகாசாரியர்கள் வரிசையாய் அமுது செய்வார்கள். தளிகை வந்து திரை ஸமர்ப்பித்ததும், வெளியே பாவாடை போட்டு அறுவாண விநியோகமாகி திருப்பணியார விநியோகம் நடந்த பிறகு, திருவாராதனம், வேத விண்ணப்பம், கடதீபத்துக்காக தட்டி முதலியவை நடந்து பெருமாள் 'புவனம்' தளிகை அமுது செய்து ஆழ்வாரார்சாரியாளும் அமுது செய்வார்கள். நம்மாழ்வாரிடம் வைத்து அமுது செய்விக்கப்படும் ப்ரஸாதம் அரையருடைய ஸ்வதந்திரமாகையால் அது அவருக்கு விட்ட விழுக்காடாக இரண்டு வீரவண்டி சேமக்கல கோஷத்தோடு அவருடைய திருமாளிகைக்கு அனுப்பப்படும்.

கோஷ்டிக்கு தீர்த்தம் சடகோபம் விநியோகமாகி ஆழ்வாராசாரியாள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாய் அருளிப்பாட்டோடு விநியோகமாகும். அப்படியே கோஷ்டிக்கும் ப்ரஸாத விநியோகமானதும், பெருமாள் ஸ்ரீசடகோபம் ஸாதித்து ஆழ்வார்களை அனுப்ப, அவர்கள் ஸ்தோத்ர பாட கோஷ்டியோடு நம்மாழ்வார் ஸந்நிதிக்கெழுந்தருளுவார்கள்.

**ஸ்தோத்திர பாட கோஷ்டி—**

பராங்குச பஞ்சவிம்சதி, நக்ஷத்ர மாலிகை, யதிராஜவிம்சதி உத்தரதினசரி முதலிய ஸ்தோத்ர பாடங்களை மண்டபத்திலிருந்து அத்தியாபகாள் ஸேவிக்கும் வைபவத்தோடு ஆழ்வாராசாரியாள் யாவரும் நம்மாழ்வார்

ஸந்நிதிக்கு எழுந்தருளுவார்கள். உடனே மதுரகவிகள் மட்டும் ஆஸ்தானம் சேருவார். வெளியே நிற்கும் மற்றவர்களுக்கு மதுர கவிகள் செய்துவைக்கும் பாவனையாய் கர்ப்பூரார்த்தி நடக்கும் ஆழ்வாருடைய மாலைகளிலிருந்து ஒன்றைக் களைந்து பெரியாழ்வாருக்கு ஸாதித்து, எல்லா ஆழ்வாராசாரியாளுக்கும் ஆழ்வாருடைய பாதுகையான 'மதுர கவியை' ஸாதித்த பிறகு, ஆழ்வாருடைய மற்றொரு மாலையையும் களைந்து உடையவருக்கு ஸாதித்து 'மதுர கவியும்' ஸாதிக்கப்படும். பெரியாழ்வார், உடையவர், கூரத்தாழ்வான், பிள்ளை லோகாசாரியார்-இந்நால்வர் தவிர மற்றவர்கள் தந்தாமுடைய ஸந்நிதிக்கெழுந்தருளுவார்கள். இந்நால்வரும் புறப்பட்டு சொக்கப்பானை கோட்டை வாசல் மணல் வெளியில்—பெரியாழ்வார் கிழக்கு முகமாயிருந்து, மேற்குமுகமாயிருக்கும் உடையவருக்கு நம்மாழ்வார் தமக்கு ஸாதித்த மாலையை ஸாதித்துத் தம்முடைய ஸந்நிதிக்கெழுந்தருளுவார். உடையவர் உடனே கிழக்கு முகமாய்த் திரும்பி தாம் முன்பு நம்மாழ்வாரிடமிருந்து பெற்ற மாலையையும் இப்பொழுது பெரியாழ்வாரிடமிருந்து பெற்ற மாலையையும் மேற்கு முகமா யெழுந்தருளியிருக்கும் கூரத்தாழ்வானுக்கும் பிள்ளை லோகாசாருக்கும் ஸாதிக்கவே, ஆழ்வான் தம்முடைய ஸந்நிதிக்குப் புறப்படுவார். உடையவர் தம் ஸந்நிதிபோய்ச் சேரும்வரையில் பிள்ளை லோகாசாரியார் உடையவரோடு கூடவே வந்து தம்முடைய ஸந்நிதிக்கெழுந்தருளுவார். உடையவர் மங்களாரத்தி செய்துகொண்டு ஆஸ்தானம் சேர்ந்ததும் ஸ்தோத்ர பாட கோஷ்டிக்கு விநியோகம் முதலியவை நடைபெறும். இதற்குள் பெருமாளுடைய ஒவ்வொரு நாள் உத்ஸவத்தையும் நடத்திவைக்கும் உபயக்காரர்கள் ஸேவை மரியாதை பெற்றுக்கொண்ட பிறகு, பெருமாள் தோளுக்கினியானில் எழுந்தருளி உடையவர் ஸந்நிதியில் கோஷ்டியானதும் புறப்படுவதற்கு ஸித்தமாயிருப்பார்.

மண்டபத்திலிருந்து புறப்பாடு—

மண்டபத்துக்குவந்த வழியாகவே பெருமாள் புறப்பட்டெழுந்தருளுவார் துலுக்கநாச்சியார் பெருமாளுடைய பின்னழகு காண்பதற்காக இப்பொழுதும் ஒய்யார நடையுண்டு. வழியிலுள்ள உபயங்களில் பானகம் வடைப்பருப்பு அமுது செய்து உபயக்காரர்களுக்கும் ஸேவை மரியாதைகளைச் செய்து வைத்துக்கொண்டே பெருமாள் கிளிமண்டபமிறங்கி கருகூல நாலுகால் மண்டபம் வருவார். உபயம் அமுது

செய்யும்போது மேள வாத்தியம் நிறுத்தப்பட்டு, நட்டுவன் பாட்டும் தாளமும்தான் நடைபெறும். கருகூல நாலுகால் மண்டபத்தில் "சேவி" யென்று அருளிப்பாடானவாறே தாஸிகள் பாடும் 'உலா' கேட்டுக்கொண்டு பெருமாள் விஜயரங்க சொக்க நாயகருக்கெதிரி லுள்ள நாலுகால் மண்டபம் போய், நடையாரம்பித்து, இரண்டடி தாவி யாகசாலை வாசலில் வெகு வேகமாய்த் திரும்பி நாலுகால் மண் டபமெழுந்தருளி,—அங்கிருந்து தாஸிகள் அபிநயம் பிடிப்பதை அனுபவித்துக்கொண்டே வழியிலுள்ள ஏராளமான உபயங்களை அமுது செய்து கருகூல நாலுகால் மண்டபம் போய் இரண்டடி தாவி அதி வேகமாய்த் திரும்பி மீண்டும் அந்த நாலுகால் மண்டபத் துக்கே எழுந்தருளுவார். உடனே ஸ்தலத்தார் முதலியவர்கள் கோஷ்டியாக நிற்பார்கள்.

திருவடி விலக்குதல்—

அவ்விடத்தில் சாச்வதமாக ஏற்படுத்திய வி. ரங்காசாரியாரும் அவருடைய சிறு தாயார் ராஜம்மாளும் உபயத்தை அமுதுசெய்த பிறகு உபயக்காரருக்கு மரியாதை நடக்கும். பிறகு, மேல் காரியத் துக்கு வேண்டிய ஸாமான்கள் வந்தனவா—என்று பார்த்துக்கொண்டு, ஸ்தாநீகர் "வட்டில் பிடித்தேல்" என்ன, பச்சைக் கற்பூர தீர்த்தம் நிறைந்த வட்டிலையும்,—"திருக்கரகக் கையேல்" என்ன, அர்க்யாதி கள் ஸமர்ப்பிக்க கலசப் பானையையும்,—"ஸௌந்தரபாண்டியம் பிடித் தேல்" என்ன, அர்க்யாதிகளை ஏந்துவதற்காக திருப்படிக்கத்தையும், "இதோ வருவதே" என்று சொல்லி அந்தந்த கைங்கர்யபரர்கள் எடுத்துக்கொண்டு வர, "அருளிப்பாடு வேத்ரபாணி" என்ன, சாத் தாத வைஷ்ணவர் கையிலுள்ள தடியைப் பெருமாளுக்கு முன்பாகப் பிடித்துக்கொண்டு எதிரில் வந்து கட்டியம் சொல்லுவார். பெருமா ளுக்கு அர்கியாதிகள் ஸமர்ப்பித்ததும், "திருவடி விளக்குவதேல்" என்ன, "இதோ வருதே" என்று சொல்லிக்கொண்டே ஊழியக் காரர் பெருமாளுடைய 'உச்சாத்தை' இரண்டு தலைப்பிலும் கொசுவி விசிறிபோலப் பிரித்துக்கொடுப்பதை அர்ச்சகர் வாங்கி பெருமா ளுடைய திருப்பவள வாயையும் திருவடிகளையும் துடைப்பார். "அடைக்கா யமுது நீட்டுவான்; திருச்சங்கு பரிமாறுவான்" என்று அருளிப்பாடு ஆனதும் "நாயிந்தே, நாயிந்தே" என்று கொண்டுவரப் படும் வேலையத்தைப் பெருமாள் அமுது செய்த பினனர், அர்ச்சகா்

உத்தம நம்பி அய்யங்கார், ஸ்தாநீகர் ஆக மூவரும் தீர்த்தம் வாங்கிக் கொள்வார்கள்.

தீர்த்த விநியோகம்—

இரண்டு ஸ்தாநீகரும் அர்ச்சகரும் தனித்தனியே வட்டிலில் தீர்த்தம் எடுத்துக்கொண்டு முன்னால் வந்து நின்றவுடன், "அருளிப்பாடு ஸ்ரீரங்க நாராயண ஜிய்யர், பராசர பட்டர், (இரட்டைப்பட்ட தேதியாயிருந்தால் வேத வியாஸ பட்டர்) வாதூல தேசிகர் என்று ஸ்தாநீகர் அருளிப்பாடு ஸாதிக்க, அம்மூவரும் கோஷ்டியிலிருந்து பெருமாளிடம் வருவார்கள். மூவருக்கும் ஒரே தடவையில் தீர்த்தம் ஸாதித்து பரிவட்டம் கட்டப்படும். பிறகு ஸ்ரீ சடகோபம் முதலில் ஸ்ரீரங்கநாராயண ஜிய்யருக்கும், கடைசியில் வாதூல தேசிகருக்கும் (அதாவது ரங்காசார் அண்ணங்கார் இவ்விருவரில் முறைக்கணக்கில் வந்திருப்பவருக்கு) ஸாதிக்கப்படும். உள்ளூரார் ஊழியக்காரர் கையில் ஒரு வட்டில் தீர்த்தத்தோடு "அருளிப்பாடு பெரிய நம்பி ராமாநுசமுடையார்" என்று ஸாதித்துக்கொண்டே போய், பெரிய நம்பி அய்யங்கார் எம்பார் முதல் அத்தியாபகரான ஸாது ஸ்ரீ வைஷ்ணவர் வரையிலுமுள்ள கோஷ்டிக்கும், ஸ்ரீரங்கநாராயண ஜிய்யர் முதல் எம்பார் வரைக்குமுள்ள ஐவரின் ஸந்நிதிப் பேர்களுக்கும், ஸ்ரீ வைஷ்ணவ ஸ்வாமிகளுக்கும், சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் பேஷ்கார்களுக்கும் கடைசியில் ப்ராம்மணேதரர்களான பாகவதர்களுக்கும் தீர்த்தம் ஸாதிப்பார். பெரியநம்பி அய்யங்கார் முதலான கோஷ்டி ஸ்வாமிகள் தீர்த்தம் வாங்கிக்கொண்டதும், ஒவ்வொருவராய் பெருமாளிடம் வந்து பரிவட்டம், மாலை, ஸ்ரீ சடகோபம் பெற்றுத் திரும்பிய பிறகு மணியக்காரர் வந்து தீர்த்தம், சந்தனம், மாலை ஸ்ரீ சடகோபம் முதலியவைகளை வாங்கிக்கொள்வார். கோஷ்டிக்கு வடைப்பருப்பு விநியோகமானதும், 'சாரீபோம்' என்று அருளிப்பாடு ஸாதிக்கப்படும். பெருமாள் ஒய்யார நடையில் புறப்பட்டு முன்புபோலவே யாகசாலை வாசலில் வேகமாய்த் திரும்பி மீண்டும் ஒரு முறை ஒய்யார நடையில் வந்து வேகமாய்த் திரும்பி இதே மண்டபத்தில் நிற்பார்.

படியேற்றம்—

சாத்தாத வைஷ்ணவன் பெருமாள் முன்னிலையில் வந்து "ஆஹோ, ஒஹோ" என்றதும், ஸ்தாநீகர்—

"அருளிப்பாடு—

இசை யறியும் பெருமாள் கூட்டத்தார்;
அழகிய மணவாளன் கூட்டத்தார்;
உறையூா் வில்லியார் கூட்டத்தார்."

என்று அருளிப்பாடு ஸாதிக்க, அரையர்களும் தாஸிகளும் வந்து பெருமாளுடைய இசைக்குத் தக்கவாறு இசை கானம் செய்கையில், பெருமாள் மெதுவாய் அசைந்துகொண்டே மேலப்படி வந்து கொண்டாட்டங்கள் கொண்டு அரையர்களால் உபலாளனம் பண்ணப் பட்டு அசைந்து அசைந்து படியேறி வெகு வேகமாய்த் திரும்பி நிற்பார்.

திருவந்திக் காப்பு—

கடதீபத்துக்காக தாஸிகள் தட்டிகொண்டு வருவார்கள். 'அருளிப்பாடு பெரிய கோயில் நம்பி' என்று அருளிப்பாடு ஆனதும், அமுதனார் எதிரே வந்து ஒரு முறை தண்டம் ஸமர்ப்பித்து திருவந்திக்காப்புக் கட்டியம் சொல்லுவார். "மங்கள வாத்தியம்" என்றவாறே நட்டு முட்டு வாத்தியம் முழங்கும். திரியைக் கொளுத்தி குடத்தின்மேல் வைத்தவுடன் "சாமா! நாயிந்தேசாமா." என்ன, சாத்தாத வைஷ்ண வன் 'பேசாதே ஸத்து என்று' கட்டளையிடுவான். பெருமாளுக்கு அர்கியாதிகள் ஸமர்ப்பித்ததும், "திருவடி விளக்குவதேல்" என்ன வாறே உச்சாத்து கொடுத்து பெருமாளுக்கு திருப்பவளவாய் துடைத்தல் முதலிய ச்ரமபரிஹாரம் செய்துவைக்கப்படும். "பரி மாறுவான்" என்னதும் குடம் எடுத்துக் கொடுத்து பெருமாளுக் கெதிரில் மேலும் கிழுமாய்ச் சுற்றப்படும். திருவந்திக்காப்பின் முடி வில் பெருமாள் வேளையம் அமுது செய்வார். அது மணியக்காரருக்கு ஸாதிக்கப்படும். பெருமாள் திரும்பி வெகு வேகமாய் ஸர்ப்பகதியில் உள்ளே எழுந்தருளுவார்.

ராத்திரி உள்ளே திருவாரதனம் முதலிய யாதொரு காரியமும் கிடையாது. நித்தியப்படி ஏற்பட்ட அரவணையையும் பாலையும் அமுது செய்வித்து கதவு பூட்டப்படும்.

10-ம் திருநாள் நாச்சியார் திருக்கோலத்தன்று தவிர பகல் பத்து முழுவதும் இதே க்ரமம் 4, 7, 8, 9, 10—இந்தத் திருநாள்களில் அரையர்

ஸேவை இரண்டு தரம் உண்டு. பாட்டுக்களுடைய ஸந்தர்பத்தை நடித்துக் காட்டவேண்டியிருப்பதால் முதல் ஸேவையில் பாசுரம் ஸேவித்த பிறகு, நடனம் தனியாய் இரண்டாம் ஸேவையாக வைத்துக் கொள்ளப்படுகிறது. ஒரு ஸேவை இருக்கும் திருநாள்களில் ஸேவை முடிந்ததும் அலங்காரம் அமுது செய்து, பாவாடை விநியோகம், வெள்ளிச்சம்பா திருவாராதனம் முதலிய காரியங்கள் தொடர்ச்சியாய் நடக்கும். இரண்டு ஸேவையுள்ள நாள்களில் முதல் ஸேவைக்குப் பிறகு அலங்காரம அமுது செய்து, பாவாடை விநியோகம் நடத்தாமல் இரண்டாம் ஸேவை ஆரம்பித்து முடிந்த பிறகு, பாவாடை விநியோகம் முதலிய காரியங்கள்.

## பகல் பத்து: மோஹனவதாரம்.

**மண்டபத்தில் நடக்கும் காரியம்—**

பகல் பத்து 10-ம் திருநாள் மோஹனவதாரம். இன்று முதல் ஸேவை முடிந்தவுடன் அலங்காரம் அமுது செய்விக்கப்பட்டு உடனே இரண்டாம் ஸேவை ஆரம்பமாகும். ஏனென்றால், இன்று அலங்காரம் பாவாடை போட்டு விநியோகம் செய்யப்படுவதில்லை. இன்று அலங்காரம் முழுவதும் அரையருக்கு பஹுமானமாய் அவருடைய திருமாளிகைக்குப் போகும். அலங்காரம் அமுது செய்தவுடன் மேலே நடக்கவேண்டிய ராவண வதத்துக்கு அருளிப்பாடாய் அரையருக்கு பெருமாள் ஸேவை மரியாதையானதும் மோஹனவதாரம் சாற்றுவதற்காக திரை ஸமர்ப்பிக்கப்படும். அரையர் தம் திருமாளிகைக்குப் போய் அலங்காரத்தைத் தம்முடைய திருவாராதன எம்பெருமானுக்கு அமுது செய்வித்து, அங்கு வந்திருக்கும் ஸந்நிதி கைங்கரியபரர்களுக்கு விநியோகம் செய்துவந்து ராவண வதத்தை நடித்துக் காட்டுவார். ராவண வதம் முடிந்ததும், அரையர்கள் உள்ளே எழுந்தருளி, திருமொழி திருநெடுந்தாண்டகங்களை சாற்றுமுறை செய்து வாழித் திருநாமம் சொல்லி மங்கலம் பாடுவார்கள். பிறகு அரையர் கோஷ்டிக்கு தீர்த்தம் சடகோபம் ஸாதிப்பார். இந்த விவரத்தை அரையர் “ஸேவை”யில் விஸ்தாரமாய்க் காண்க.

இனி வெள்ளிச்சம்பா அமுதுசெய்வது. இன்று திருவாராதனம் வேதவிண்ணப்பங்கள் கிடையா. கடதீபத்துக்காக தட்டி வந்து தளிகை

அமுது செய்தபிறகு திரை வாங்கி கோஷ்டிக்கு தீர்த்தம் சடகோபம் மட்டும் ஸாதிக்கப்படும். இன்று கோஷ்டிக்கு ப்ரஸாத விநியோகமும் கிடையாது. பெருமாள் புறப்படு முன் ஆழ்வாராசாரியாள் புறப்பட்டு கருட மண்டபம் கீழ்புறத்தில் வரிசையாய் எழுந்தருளியிரு-பார்கள்.

கருட மண்டபத்தில் நடக்கும் காரியம்—

பெருமாள் புறப்பட்டு கருட மண்டபம்வந்து கீழண்டை அங்கணத்தில் ஆழ்வாராசாரியாளுக்கருகில் தெற்கு முகமாய்த் திரும்பியதும், தாஸிக்கு சேவி யென்று அருளிப்பாடு ஸாதித்து கருட மண்டபத்தை சுற்று வருவார்; கருட மண்டபத்தை முழுவதும் சுற்றிவராமலே ஒரு மேல்புறத்து அங்கணத்திலிருந்தவாறே கருடன் ஸந்நிதிக்கு முன்புற முள்ள நாலுகால் மண்டபமேறி வடக்கு முகமாய்த் திரும்பி, எல்லா ஜனங்களுக்கும் ஸேவை ஸாதிப்பதற்காக ஸ்ரீபாதம் தாங்குவார் தோளி லேயே ஒரு மணி நேரத்துக்குக் குறையாமல் எழுந்தருளியிருப்பார். பிறகு கருகூல நாலுகால் மண்டபத்தில் நடந்ததுபோல திருவடி விளக்கி தீர்த்த விநியோகம் முதலியவை நடக்கும். பெருமாள் புறப்பட்டு நேராக கருட மண்டபத்துக்கு முன்புறம் வந்து திரும்பி சாரீயோமென்று அருளிப்பாடு ஸாதித்து மீண்டும் நடு மண்டபமே போய் அதிலிருந்து மேற்கிலிறங்கி வடக்கு முகமாய்த் திரும்பியதும், அரையருக்கு இசை யறியும் பெருமாள் கூட்டத்தார் என்றருளிப்பாடு ஆகி வடபுறம் போய் கிழக்கில் திரும்பி நிற்பார். முன்பு மண்டபத்தில் ஸாதித்த அருளிப்பாட்டு க்ரமத்திலேயே ஆழ்வாராசாரியாள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக அருளிப்பாடாகும். ஒருவர் பெருமாளுக்கெதிரே வந்ததும் கணக்குப் பிள்ளை 'ஸர்வாங்க மோஹனக் கைவி ஒன்று' என்று கணக்குப் படிக்க, ஸ்தாநீகர் ஆழ்வாருககுப் பெருமாளுடைய வஸ்திரம் ஒன்று போற்றுவார்; ஊழியக்காரர் கைகளில் சந்தனம் ஸாதிப்பார்; அர்ச்சகர் ஸ்ரீ சடகோபம் ஸாதிப்பார். ஒவ்வொருவரும் இப்படி மரியாதை பெற்றுக்கொண்டு தம்முடைய ஸந்நிதிக்கு எழுந்தருளியதும் அரையர் தாஸி முதலியவர்களுக்கு அருளிப்பாடாகும். பெருமாள் அரையர்களின் இசையோடு மேலப்படி போய் படியேற்றம் திருவந்திக்காப்பு முதலியவை செய்துகொண்டு உள்ளே எழுந்தருளுவார்.

மோஹநாவதார ஐதிஹ்யம்—

கள்வன் கொல்பிராட்டி யென்ற திருமங்கையாழ்வாருக்கு பெருமாளிடம் ஏற்பட்ட நாயகி பாவத்தைப் பெருமாள் தாம் நாயகியாக அநுகரிக்கிறார் என்று ஸம்ப்ரதாய மறிந்தவர் சொல்லுவார்கள். மார்கழி சுக்ல தசமி யன்று பெருமாள் அம்ருதமதனம் பண்ணி மோஹநாவதாரம் எடுத்ததாகவும் சிலர். இவ்விஷயம் விவரமாய்த் தெரியவில்லை.

---

## 5. அரையர் ஸேவை விவரம்.

### முதல் திருநாள்—

"பல்லாண்டு" முதல் "வெண்ணெய் விழுங்கி" பெரியா-திருமொ-2-ம் பத்து. 9-ம் திருமொழி முடிய, பாசுரங்கள் 212.

"பல்லாண்டு", அடியோமோடும்" என்ற பாட்டுக்களுக்கு மட்டும் அபிநய வியாக்யானங்கள்.

இவ்விரண்டு பாட்டுக்களுக்கு அபிநயம் நடக்கும்போது மட்டும் கோஷ்டி நின்றுகொண்டிருக்க வேண்டியது. அரையர் குனிந்து இரு கைகளாலும் கோஷ்டியை எழுந்தருளப்பண்ண, கோஷ்டி எழுந்து நிற்கும்; வியாக்யானம் ஆரம்பிக்கும்போது உட்கார்ந்துவிடும்.

திருப்பல்லாண்டு வியாக்யானம் முடிந்தவுடன் பெரியாழ்வார் ஸந்நிதியிலிருந்து வேஷ்டியம், சாற்றுப்படி, ஸம்பாவனைகள் அரையருக்குக் கொண்டுவந்து கொடுக்கப்படும்.

பெருமாள் விஷயமாய் செய்துவைக்கப்பட்ட அரையர்களின் குலதனமான வாழித் திருநாமத்தைச் சொல்லி தினந்தோறும் ஸேவை முடிக்கப்படும்.

### இரண்டாம் திருநாள்—

"ஆற்றிலிருந்து" பெரியா-திருமொ, 2-ம் பத்து, 10-ம் திருமொழியிலிருந்து "துக்கச் சுழலை" பெரியா-திருமொழி, 5-ம் பத்து, 3-ம் திருமொழி முடிய, பாசுரங்கள் 250.

"'ஆற்றிலிருந்து'', ''தன்னேராயிரம்'' (பெரியா—திருமொ, 3-ம் பத்து, 1-ம் திருமொ, முதல் பாட்டு) இவ்விரண்டு பாட்டுக்களுக்கு மட்டும் அபிநய வியாக்யானங்கள்.

## மூன்றும் திருநாள்—

''சென்னியோங்கு'' பெரியா-திருமொ, 6-ம் பத்து, 4-ம் திருமொழியிலிருந்து ''மற்றிருந்தீர்கட்கு'' நா-திரு-12-ம் திருமொழி முடிய, பாசுரங்கள் 164.

''சென்னியோங்கு'', ''மார்கழித் திங்கள்'' (திருப்பாவை முதல் பாட்டு) இவ்விரண்டு பாட்டுக்களுக்கு மட்டும் அபிநய வியாக்யானங்கள்.

''மார்கழித் திங்கள்'' பாசுரம் அபிநயிக்கப்படும்போது கோஷ்டி நின்று கொண்டிருக்க வேண்டியது.

170855

''சென்னியோங்கு'' என்ற பாட்டுக்கு அபிநய வியாக்யானங்களாகி அத் திருமொழியில் மேல்பாட்டுக்களை ஸேவிக்கும்போது, அபிநயம் முன்னும் பாசுரம் பின்னுமாய் ஒவ்வொரு பாட்டும் ஸேவிக்கப்படும். இப்படி அத்திருமொழியில் 7-ம் பாட்டு இரண்டாம் அடி ''திருப்பொலிந்த சேவடி யென் சென்னியின்மேல் பொறித்தாய்'' என்றதுவரையில் அபிநயத்தோடு ஸேவித்து, அவ்விடத்தில் நிறுத்தி,—பெருமாளுடைய திருவடிகள் தம்முடைய திருமுடியில் பொறிக்கப்பெற்ற பெரியாழ்வாருடைய பாக்யத்தை அனுகரிப்பதாய் அரையர் பெருமாளிடமிருந்து ஸ்ரீ சடகோபத்தைத் தன் தலையில் தரித்துவந்து ஆழ்வாராசார்யர்களனைவருக்கும் ஸ்ரீ சடகோபம் ஸாதித்து கோஷ்டியாரனைவருக்கும் அதை அனுக்ரஹிப்பார்.

இன்று அரையர் ஸ்ரீ சடகோபம் மாத்திரம் ஸாதிப்பதே யன்றி தீர்த்தம் ஸாதிப்பதில்லை.

அரையர் ஸ்ரீ சடகோபத்தைப் பெருமாளிடம் எழுந்தருளப்பண்ணி மேல் பாசுரங்களை ஸேவித்து, திருப்பாவை ''மார்கழித் திங்கள்'' வியாக்யானம் ஸேவித்து முடிந்ததும், திருப்பாவை ஜீயரென்று ப்ரஸித்தி பெற்ற உடையவர் ஸந்நிதியிலிருந்து வேஷ்டியும் முதலியவை அரையருக்கு பஹுமானமாகக் கொண்டுவந்து கொடுக்கப்படும்.

## நாலாம் திருநாள்—

''கண்ணனென்னும்'' நா-திரு-13-ம் திருமொழியிலிருந்து ''திருச்சந்த விருத்தம்'' முடிய, பாசுரங்கள் 245.

“கண்ணனென்னும்”, “இருளிரிய” (பெருமாள் திருமொழி முதல் பாட்டு) இவ்விரண்டு பாட்டுக்களுக்கு மட்டும் அபிநய வியாக்யானங்கள்.

முதல் ஸேவை

“கண்ணனென்னும் என்ற பாட்டுக்கு அபிநய வியாக்யானங்களாகி அத்திருமொழி 3-ம் பாட்டில் “கஞ்சையைக் காய்ந்த கருவில்லி” என்று ப்ரஸக்தமான கம்ஸ வதத்தை நடித்துக் காட்டுவதற்காக “அழகிய மணவாளப்பெருமாள் கம்ஸ வதம் செய்தருளினபடி எவ்வண்ணமே” என்ற கேள்வியை மட்டும் உத்க்ஷேபித்துவிட்டு, அத்திருமொழி மீதிப் பாட்டுக்களை ஸேவியாமல் அடுத்த திருமொழி ஆரம்பிக்கப் படும்.

“இருளிரிய” வியாக்யானமானதும் அரையருக்கு குலசேகராழ்வார் ஸந்நிதியிலிருந்து வேளையம், முதலியன கொண்டுவந்து கொடுக்கப்படும்.

திருச்சந்த விருத்தத்தில் ஒரு பாட்டுக்குக்கூட அபிநய வியாக்யானங்கள் கிடையா.

இரண்டாம் ஸேவை—கம்ஸ வதம்.

கம்ஸ வத விஷயமான தம்பிரான்மார் படி (வியாக்யானம்) ஸேவித்து “அழகியமணவாளப்பெருமாள் கம்ஸவதம் செய்தருளினபடி இவ்வண்ணமே” என்று சொல்லி க்ருஷ்ணாவதாரம் முதல் கம்ஸ வதம் வரையிலுள்ள ஒவ்வொரு வ்ருத்தாந்தத்தையும் நடித்துக்காட்டி, அத்திருமொழியில் முன்பு நிறுத்தப்பட்ட 8 பாசுரங்களையும் ஸேவிப்பது.

## ஐந்தாம் திருநாள்—

“காவலிற் புலனை வைத்து” என்ற திருமாலை முதல் பாட்டிலிருந்து “அமலனாதிபிரான்” முடிய, பாசுரங்கள் 65.

“காவலிற் புலனை வைத்து”, “அமலனாதிபிரான்” இவ்விரண்டு பாட்டுக்களுக்கு மட்டும் அபிநய வியாக்யானங்கள். “காவலிற் புலனை வைத்து” வியாக்யானம் முடிந்ததும், தொண்டரடிப்பொடியாழ்வார் ஸந்நிதியிலிருந்து அரையருக்கு வேளையம், முதலியவை கொண்டுவந்து கொடுக்கப்படும்.

திருமாலை முதல் பாட்டுக்கு அபிநய வியாக்யானங்களானதும் மேல் பாட்டுக்கள் அபிநயம் முன்னும் பாசுரம் பின்னுமாய் 6-ம் பாட்டு 3-ம் அடி முடிய ஸேவிக்கப்படும். 3-ம் அடியில் “அரங்கனார்க்காட் செய்யாதே” என்னுமிடத்தில் நம்பெருமாளுடைய திருவத்யயனோத்ஸவ

வைபவத்தை புறப்பாடு, திருவாராதனம், வேத விண்ணப்பம், அருளிப்பாடு முதலிய ஸகல விவரத்துடனும் அபிநயித்துக் காட்டி மேல் பாட்டுக்கள் ஸேவிப்பது.

## ஆரும் திருநாள்—

"கண்ணி நுண் சிறுத்தாம்பு" முதல் "வந்துனதடியேன்" பெரிய திருமொழி, 3-ம் பத்து-5-ம் திருமொழி முடிய, பாசுரங்கள் 261.

"கண்ணிநுண் சிறுத்தாம்பு", "வாடினேன் வாடி" (பெ-திருமொ 1-1-1) இவ்விரண்டு பாட்டுக்களுக்கு மட்டும் அபிநய வியாக்யானங்கள். "கண்ணி நுண் சிறுத்தாம்பு" வியாக்யானம் முடிந்ததும் அரையருக்கு கண்ணிநுண் சிறுத்தாம்பில் ஈடுபட்ட மணவாளமாமுனி ஸந்நிதியிலிருந்து வேஷ்டியம், முதலியவை கொண்டு வந்து கொடுக்கப்படும்.

"வாடினேன் வாடி" அபிநய ஸமயத்தில் கோஷ்டி நின்றுகொண்டிருக்க வேண்டியது.

## ஏழாம் திருநாள்—

"தூவிரிய மலருழக்கி" பெ-திருமொ-3-ம் பத்து, 6-ம் திருமொழியிலிருந்து "கைம்மான மழகளிற்றைக் கடற் கிடந்த" பெ. திருமொ, 5-ம் பத்து, 6-ம் திருமொழி முடிய, பாசுரங்கள் 210.

முதல் ஸேவை.

"தூவிரிய மலருழக்கி" என்ற பாட்டுக்கு அபிநய வியாக்யானங்களாகி மேல் பாட்டு ஸேவிக்கையில், அத்திருமொழி 5-ம் பாட்டு "வாளாய கண் பனிப்ப" வில் "ஓ மண்ணளந்த தாளாளா" என்று ப்ரஸக்தமான வாமனுவதார வ்ருத்தாந்தத்தை நடித்துக் காட்டுவதற்காக, "அழகிய மணவாளப்பெருமாள் திருவுலகளந்தருளினபடி எவ்வண்ணமே." என்ற கேள்வியை மட்டும் காட்டிவிட்டு அத்திருமொழி மீதிப் பாட்டுக்களை ஸேவியாமல் அடுத்த திருமொழி ஆரம்பிக்கப்படும்.

இரண்டாம் ஸேவை—வாமனுவதாரம்.

வாமனுவதார விஷயமான தம்பிரான்படி (வியாக்யானம்) ஸேவித்து "அழகிய மணவாளப் பெருமாள் திருவுலகளந்தருளினபடி இவ்

வண்ணமே'' என்று சொல்லி, வாமனாவதார வ்ருத்தாந்தத்தை நடித்துக் காட்டி அத்திருமொழியில் முன்பு நிறுத்தப்பட்ட பாக்கி பாட்டுக் களை ஸேவிப்பது.

## எட்டாம் திருநாள்—

"பண்டை நான்மறையும்'' பெ. திரு, 5-ம் பத்து, 7-ம் திருமொழியிலிருந்து "சிலையிலங்கு'' பெ. திரு, 8-ம் பத்து, 1-ம் திருமொழி முடிய, பாசுரங்கள் 250.

"பண்டை நான்மறையும் என்ற பாட்டுக்கு மட்டும் அபிநய வியாக்யானங் கள். இப்பாட்டின் கடைசியில் "அரங்கமாநகரமர்ந்தானே'' என்னு மிடத்தில் அவதார வைபவங்கள் அபிநயித்துக் காட்டப்படும்.

### முதல் ஸேவை.

"பண்டை நான்மறையும்'' என்ற பாட்டுக்கு அபிநய வியாக்யானங்களான தும், "ஆராமம் சூழ்ந்தவரங்கம்'' "அணிபொழில் சூழ்திருவரங்கம்'' என்று திவ்ய ப்ரபந்தத்தில் 'அரங்கம்' என்ற பதம் சேர்ந்துள்ள வாக்யங்களனைத்தையும் ஸேவிப்பது. பிறகு மேல் பாசுரங்களை ஸேவிக்கையில் அத்திருமொழி 4-ம் பாட்டு "மாயிருங்குன்றமொன்று மத்தாக''வில் "ஆயிரம் தோளால் அலைகடல் கடைந்தான்'' என்று ப்ரஸக்தமான அம்ருதமதன வ்ருத்தாந்தத்தை நடித்துக் காட்டுவதற் காக,—"அழகிய மணவாளப் பெருமாள் அம்ருதமதனம் செய்தரு ளினபடி எவ்வண்ணமே'' என்ற கேள்வியை மட்டும் எடுத்துக் காட்டி, அத்திருமொழி மீதிப் பாட்டுக்களை ஸேவியாமல், அடுத்த திருமொழி ஆரம்பிக்கப்படும்.

### இரண்டாம் ஸேவை—அம்ருதமதனம்.

அம்ருதமதன விஷயமான தம்பிரான் படி (வியாக்யானம்) ஸேவித்து "அழகிய மணவாளப் பெருமாள் அம்ருதமதனம் செய்தருளினபடி இவ்வண்ணமே'' என்று சொல்லி, அம்ருதமதன வ்ருத்தாந்தத்தை நடித்துக் காட்டி அத்திருமொழியில் நிறுத்தப்பட்ட மேல் பாட்டுக் களை ஸேவிப்பது.

## ஒன்பதாம் திருநாள்—

"தெள்ளியீர் தேவர்க்கும்'' பெ. திரு. 8-ம் பத்து,

2-ம் திருமொழியிலிருந்து "ஒரு நற்சுற்றம்" பெ. திரு. 10-ம் பத்து, 1-ம் திருமொழி முடிய, பாசுரங்கள் 200.

"தெள்ளியீர் தேவர்க்கும்" என்ற பாட்டுச்கு மட்டும் அபிநய வியாக்யானங்கள்

### முதல் ஸேவை.

"தெள்ளியீர் தேவர்க்கும்" என்ற பாட்டுக்கு அபிநய வியாக்யானங்களானதும் மேல் பாட்டுக்களில் நடித்துக்காட்ட வேண்டிய ஸந்தர்பம் யாதுமில்லாததால் க்ரமமாய் மேல்பாட்டுக்களை ஸேவித்து நிறுத்தப் படும்.

### இரண்டாம் ஸேவை—முத்துக்குறி.

அலங்காரம் அமுது செய்து திரை வாங்கினவுடன் "கொரத்துக்கு அருளிப்பாடு" என்று முத்துக் குறிக்கு அருளிப்பாடாகும்.

நாளை வரப்போகிற திருநெடுந்தாண்டக ஸந்தர்பத்தை ஆகர்ஷித்து அதன் முதல் பாட்டு "மின்னுருவாய்" என்றதற்கு அபிநய வியாக்யானங்கள். முதல் பாட்டுக்கு பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானம் முடிந்ததும் திருநெடுந்தாண்டகம் முதல் பாட்டிலிருந்து "பட்டுடுக்கும்" என்றது முடிய பாட்டுக்களுக்கு தம்பிரான்படி ஸேவிப்பது.

11-வது பாட்டில் 'கட்டுவிச்சி' சொல்லும் கூடல் குறியை முத்துக்குறியாக அபிநயித்துக் காட்டுவது. இங்கு கட்டுவிச்சி சொல் முழுவதும் தம்பிரான்படியிலிருந்து எடுத்துச் சொல்லப்படுவது மட்டும் உத்ஸவாரம்பத்துக்கு முன்பு திருநெடுந்தாண்டக தினத்தைவிட அதிகம். அன்று 11-ம் பாட்டில் கட்டுவிச்சி சொல் வியாக்யானத்திலிருந்து எடுத்துச் சொல்லப்படுவதில்லை. இன்று மட்டும் சொல்லப் படுகிறது.

இன்றைய பாட்டுக்களில் நடித்துக்காட்டவேண்டிய ஸந்தர்பம் யாதொன்றுமில்லை. ஆனாலும், நாளை நேரிடும் முத்துக்குறி, ராவண வதம் ஆக இரண்டு நடனத்தையும் ஒரே நாளில் நடித்துக்காட்ட முடியாமல் அதில் முத்துக்குறி இன்று இரண்டாம் ஸேவையாக வைத்துக்கொள்ளப்பட்டது.

முத்துக் குறிக்காக அரையர் பெருமாளிடமிருந்து ஸ்ரீ சடகோபத்தைத் தம் தலையில் தரித்துவந்து ஆழ்வார்களுக்கு ஸாதித்து கோஷ்டியாரனைவருக்கும் ஸாதிப்பார்.

இன்று அரையர் தீர்த்தம் ஸாதிப்பதுண்டாகையால் கோஷ்டிக்கு தீர்த்தம் முன்னதாகவும் ஸ்ரீ சடகோபம் பின்பாகவும் ஸாதிக்கப்படும்.

## பத்தாம் திருநாள்—

"இரக்கமின்றி" திரு, 10-ம் பத்து, 2-ம் திருமொழியிலிருந்து திருமொழி முழுவதையும் ஸேவித்து "திருக்குறுந்தாண்டகம்" "திருநெடுந்தாண்டகங்"களையும் ஸேவிப்பது பாசுரங்கள் 224.

"இரக்கமின்றி" என்ற பாட்டுக்கு மட்டும் அபிநய வியாக்யானங்கள்.

### முதல் ஸேவை.

"இரக்கமின்றி" என்ற பாட்டுக்கு அபிநயாதிகளாகி க்ரமமாய் மேல்பாட்டுக்களை ஸேவித்து நிறுத்துவது. அலங்காரம் அமுது செய்ததும்—"ராவண வதத்துக்கருளிப்பாடு" என்று அருளிப்பாடாகி நாச்சியார் திருக்கோலததுக்காக திரை ஸமர்ப்பிக்கப்படும்.

### இரண்டாம் ஸேவை--ராவண வதம்.

ராவண வத விஷயமான தம்பிரான் மார்படி (வியாக்யானம்) ஸேவித்து சக்ரவர்த்தித் திருமகள் அவதாரம் முதல் ராவண வதம் முடிய நடித்துக் காட்டப்படும்.

பிறகு, அரையர்கள் உள்ளே எழுந்தருளி பெருமாள் நாச்சியார்திருக்கோலமாயிருப்பதால் "மாலாய்வந்தரங்கர் மணம் புணரும் நாச்சியார்" என்றது முதலான நாச்சியார் கொண்டாட்டங்களால் பெருமாளைக் கொண்டாடி,—திருமொழியின் கடைசீ பாசுரமான "குன்றமெடுத்து" என்றதையும், திருநெடுந்தாண்டகத்தின் கடைசீ பாசுரமான "மின்னுமா மழை" என்றதையும் பாடி திருமொழி திருநெடுந்தாண்டகங்களைச் சாற்றுமுறை செய்வார்கள். தினந்தோறும் ஸேவையின் முடிவில் சொல்லப்படும் வாழித் திருநாமம் ஸேவித்து இன்று மங்கலமும் அதிகமாய்ப் பாடப்படும்.

திருமொழி சாற்றுமுறை ப்ரஸாதமாக பெருமாளுடைய தீர்த்தம் ஸ்ரீ சடகோபம் அரையரால் கோஷ்டிக்கு ஸாதிக்கப்படும். ஆழ்வாராசாரியர்களுக்கு முதலில் ஸ்ரீ சடகோபம் ஸாதித்து, கோஷ்டிக்கு முதலில் தீர்த்தமும் பிறகு ஸ்ரீ சடகோப்மும் ஸாதிப்பது வழக்கம்.

# 6. இராப் பத்து—பரமபத ஏகாதசி.

பரமபத ஏகாதசி மார்கழி மாஸத்தில் வரும்போது அந்த மாஸ வழக்கப்படி முதலில் திருப்பள்ளி யெழுச்சி திருவாராதனமாகும். மேலே காரியம் அதிகமாயிருப்பதால் இன்றுமட்டும் காவேரியிலிருந்து திருமஞ்சனம் வராது. கார்த்திகை மாதக் கடைசீ தேதியில்கூட பரமபத ஏகாதசி வருமாகையால், அந்த மாஸத்தில் திருப்பள்ளி யெழுச்சிக்கு ப்ரஸக்தி யில்லையாகையால், நித்தியப்படிபோல முதலில் திருமஞ்சனம் வந்து பொங்கல் அமுது செய்து மேல்காரியம் நடைபெறும்.

மார்கழி மாஸமாயிருந்தால் திருப்பள்ளி யெழுச்சியானதும், கார்த்திகை மாஸமாயிருந்தால் பொங்கல் ஆனதும் பட்டரைத் திருமாளிகையி லிருந்து எழுந்தருளப்பண்ண கோயில் பிருதுகள் போகும். பட்டர் மஹா வைபவத்தோடு புறப்பட்டு வந்து ஆரியபடாள் வாசல் நுழைந்தவுடன் அந்த துவாரம் சாற்றப்படும். பெருமாள் புறப் பட்டு பரமபத வாசல் திறந்து வெளியே எழுந்தருளிய பிறகுதான் இந்த துவாரம் திறப்பது வழக்கம். இந்தத் திருநாள் முழுவதும் இப்படியே.

வேத விண்ணப்பம்—

பட்டர் ப்ரதக்ஷிணமாய் வந்து சந்தன மண்டபத்தில் எழுந்தருளியிருக்க மணியக்காரர் ஸாஷ்டாங்கமாய் தண்டம் ஸமர்ப்பித்து பட்டரை எழுந்தருளப் பண்ணுவார். உடனே ஸ்தாநீகர் கர்பக்ருஹத்வாரத்தி லிருந்து பட்டருக்கு அருளிப்பாடு ஸாதிப்பார். ஒரு வருஷம் பராசர பட்டருக்கும் ஒரு வருஷம் வேத வியாஸ பட்டருக்குமாக இந்த உத் ஸவத்தில் முறையாகையால் எந்த பட்டருக்கு முறையோ அவருக்கு அருளிப்பாடு ஸாதிக்கப்படும். பட்டர் எழுந்தருளி ஸ்தாநீகர் கையில் தேங்காயையும் ஒருபணத்தையும் கொடுத்து, ஒரே தடவை தண்டம் ஸமர்ப்பித்துவிட்டு உடனே பட்டருக்குத் தொங்கு பரிவட்டம் கட்டப்படும். உள்ளே போய் யஜுர் வேதம் முதல் பஞ்சாதி யைச் சொல்லுவார். பிறகு அருளிப்பாடு ருக்வேதம், அருளிப்பாடு யஜுர் வேதம், அருளிப்பாடு ஸாமவேதம், அருளிப்பாடு சந்தஸ், ஸாமம் அருளிப்பாடு அதர்வண வேதம், அருளிப்பாடு என்கிற வார்த்தை யில்லாமல் "சுக்ல யஜுஸ்" "ஏகாயனீ சாகை" என்று அருளிப்பாடாக அந்தந்த வேதத்துக்கு பாத்தியப்பட்டவர்கள் வந்து

தேங்காயும் ஸம்பாவனையும் கொடுத்து அந்தந்த வேதங்களைத் தொடங்குவார்கள். பட்டர் தவிர மற்றவர்கள் உள்ளே போகாமல் வெளியிலிருந்தே தொடங்குவது வழக்கம். திருவாராதனத்தின் முடிவில் நடக்கும் வேத விண்ணப்பத்தில் சந்தஸ்ஸாமம், சுக்ல யஜுஸ், ஏகாயன சாகை இம்மூன்றும் கிடையாது. முதலில் பட்டருக்கு அருளிப்பாடாகி அவர் ஒரு பஞ்சாதி சொன்னவுடனே க்ரமமாய் நாலு வேதங்களும் ஆகும். பிறகு 'அருளிப்பாடு புராணம்' என்றதும் பட்டர் புராண ச்லோகமென்று சொல்லுவார். பிறகு 'இயல்' என்று அருளிப்பாடாக அமுதனார் இயல்பாவிலிருந்து ஒரு பாசுரம் ஸேவிப்பார். இப்படி திருவாராதனத்தின் முடிவிலுள்ள வேத விண்ணப்பத்தில் நடக்கும் புராணம் இயல் இரண்டும் இந்த ஸந்தர்ப்பத்தில் கிடையாது. இப்பொழுதுள்ள சந்தஸ்ஸாமம் முதலிய அதிகப்படி மூன்றும் திருவாராதன வேத விண்ணப்பத்தில் கிடையாது.

வேத விண்ணப்பம் முடிந்ததும் பட்டர் மற்றைய வேத விண்ணப்பக்காரர்களோடும், வேத பாராயணம் ஸ்வாமிகளோடும் பகல் பத்து மண்டபம் போய் வேத பாராயணம் செய்துகொண்டிருப்பார்.

பிறகு, திருவாய்மொழித் தொடக்கம். இதன் விவரம் திருநெடுந்தாண்டகம் போலவே.

பெரிய அவஸரம் திருவாராதனமாகி தளிகை அமுது செய்யும்போது திருவரங்க வேத பாராயணத் தளிகையும் அமுது செய்து பகல் பத்து மண்டபத்தில் பட்டர் கோஷ்டியில் விநியோகமாகும். பிறகு பட்டர் துரை மண்டபம் போய் வேத பாராயணம் பண்ணிக்கொண்டிருப்பார்.

உடனே பெரிய பெருமாளுக்கு முத்தங்கியும் உத்ஸவருக்கு ரத்னங்கியும் சாற்றப்பட்டு ரக்ஷாபந்தனமாகி, பெருமாள் கிளி மாலை சாற்றிக் கொண்டு ஸூர்யோதயத்துக்கு முன்னதாகவே புறப்படுவார்.

வாசல் திறப்பு—

மேலப்படியில ஸ்தலத்தார் முதலியவர்களுக்கு மரியாதையானவுடன் திருவரங்கம் கூட்டத்தாரில் தலைவரான உத்தமநம்பி அய்யங்காருக்கு தொங்கு பரிவட்டமும் ஸ்ரீ சடகோபமும் ஸாதித்து பெருமாள் கீழே இறங்குவார்; கீழே இறங்கி வடக்கு முகமாய்த் திரும்பியதும் "அருளிப்பாடு திருவரங்கம் கூட்டத்தார்" என்னவாறே நீண்ட காலமாய் இந்தப் பெருமாளோடு கூடவே வாஸம் செய்துகொண்டிருக்கும் கூட்டத்தார்களாகில் தென்கலையார்கள் பிள்ளைப்பெருமாளையங்காருடைய பாசுரங்களை ஸேவிப்பார்கள். பெருமாள் இரண்டடி எழுந்தருளிய

தும் "திருக்குருகூர் தாஸர்," "திருநகரியூர் தாஸர்" என்று சொல்லி ஸ்தாநீகர் பெருமாளுடைய பட்டிலிருந்து இரண்டு நூல் எடுத்து இரண்டு சாத்தாதவர்களின் தலையில் ஸாதிப்பார்; மணவாளமாமுனிகள் எழுந்தருளியிருக்குமிடம் வந்தவுடன் 'திருக்குருகூர் தாஸர்' என்று சொல்லி ஆயனார் ஸ்வாமிக்கு ஒரு நூல் ஸாதிப்பார். இன்று ரத்தினங்கி சாற்றிக்கொண்டிருப்பதால் ஒரு இடத்திலும் ஒய்யார நடை கிடையாது. நாளை முதல் கீழப்படி, துரை ப்ரதக்ஷிணம், நடை கொட்டகை, முதலிய இடங்களில் ஒய்யார நடையுண்டு.

பெருமாள் நாழிகேட்டான் வாசல் தாண்டி ப்ரதக்ஷிணமாய் துரை மண்டபம் வந்தவுடன் பட்டர் பெருமாளை தண்டம் ஸமர்ப்பித்த பிறகு, பெருமாள் மண்டபத்தின் மத்தியில் எழுந்தருளி உள்ளே நடந்த க்ரமத்திலேயே இங்கு மறுபடியும் வேத பாராயணம் நடக்கும். இப்பொழுது பட்டர் 8-ம் ப்ரச்னம் கடைசீ பஞ்சாதி ஸேவிப்பார். முதல்பஞ்சாதியை உள்ளே தொடங்கிய பிறகு பாக்கி பஞ்சாதிகளை வெளியே சொல்லிக் கொண்டிருந்து, இன்றைக்கு கடைசீயான பஞ்சாதியைச் சொல்லி இன்றைய வேத விண்ணப்பம் பூர்த்தியாகும். யஜுர் வேதம் 82 ப்ரச்னத்தில் மனுஷ்யனுடைய கலியாணம் முதலிய காரியங்களுக்கு உபயோகப்படும் 2 ப்ரச்னம் தவிர 80 ப்ரச்னம் தான் ஒரு நாளுக்கு எட்டு ப்ரச்னமாக ஸந்நிதியில் சொல்லுவது வழக்கம்.

இந்த வேத விண்ணப்பத்தின் முடிவில் ஒவ்வொருவருக்கும் தீர்த்தமும் சந்தனமும் விநியோகமாகும். பட்டருக்கு இவ்விடத்திலும் தொங்கு பரிவட்டம் கட்டப்படும். பிறகு கோஷ்டிக்கு தீர்த்த விநியோகமாகி திருவாசல் திறந்து பெருமாள் வெளியே எழுந்தருளுவார்,

திருவாசல் ஐதிஹ்யம்—

அஸுரர்களை உத்தரத்வாரத்தின் வழியாய் பகவான் அழைத்துக்கொண்டு போய் முக்தி கொடுத்தபடியால் இந்த துவாரம் பரமபத வாசலென்று வைக்கப்பட்டிருக்கிறது. அஸுரர்களுக்குப் பெருமாள் தம்முடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை ஸேவை ஸாதித்ததால் இன்று பெருமாள் ரத்னங்கி சாற்றிக்கொள்கிறார். ஆயிரக்கால் மண்டபம் பரமபதம். கொட்டகை திவ்ய காந்தாரம். பரமபத வாசல் வைகுண்ட த்வாரம். துரை பரதக்ஷிணத்தில் வேத விண்ணப்பம் நடக்குமிடம் விரஜாநதி.

கோட்டகையில் நடக்கும் காரியங்கள்—

பெருமாள் புறப்படுமுன்னரே ஆழ்வார்கள் கோட்டகையில் எழுந்தருளி யிருப்பார்கள். நம்மாழ்வார், திருமங்கை மன்னன், உடையவர்—மூவரும் நடை கோட்டகையின் தென்கோடியிலிருந்து ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தால் பெருமாளை வரவேற்று கொட்டகைக்கு எழுந்தருளுவார்கள்.

கொட்டகையில் வடபுறம் கீழண்டை மண்டபத்தில் நெடுநேரம் ஜனங்களுக்கு ஸேவை ஸாதித்த பிறகு, ஆழ்வாராசார்யாளுக்கு அருளிப்பாடு மரியாதை நடக்கும். அரையர்களை இந்தத் திருநாள் முழுவதும் திருமாளிகையிலிருந்து கோயில் மஹா ஜனம் கைங்கரியபரர்கள் எழுந்தருளப் பண்ணுவார்கள். அவர்கள் பெருமாளுக்கெதிர் மண்டபத்தில் நின்றுகொண்டிருக்கும் ஆழ்வார், திருமங்கை மன்னன், உடையவர் பக்கத்தில் வந்ததும், "திருவாய்மொழி விண்ணப்பம் செய்வார்" என்று அருளிப்பாடாகும். இந்த திருநாள் முழுவதும் அரையர்களுக்கு இப்படியே அருளிப்பாடு.

அரையர்கள் மலப்பு ஸேவித்துக்கொண்டே பெருமாளிடம் வந்து தீர்த்தம், சந்தனம், பரிவட்டம் மாலை, ஸ்ரீ சடகோபம் முதலிய ப்ரஸாதங்களையும் மரியாதைகளையும் பெற்றுக்கொண்டு இராப்பத்து முதல் திருநாளாதலால் திருவாய்மொழி முதல் பத்து "உயர்வற—" பாசுரத்தை தாளத்தோடு ஸேவிப்பார்கள். பகல் பத்தில்போல பெருமாள் மண்டபம் எழுந்தருளிய பிறகு அரையர்களுக்கு மரியாதை செய்வதில்லை. இராப் பத்து முழுவதும் பெருமாள் கொட்டகையில் எழுந்தருளியிருக்கும்போதே அரையர்களுக்கு அருளிப்பாடு முதலியவை நடந்து, அன்றன்று ஸேவிக்கவேண்டிய பாசுரங்களின் முதல் பாசுரத்தைப் பெருமாளிடத்திலேயே தொடங்குவது வழக்கம். உடனே, 'சாரீயோம்' என்று அருளிப்பாடாகி கொட்டகையில் தெற்கு நோக்கி எதிர் மண்டபம்வரைக்கும் ஒய்யார நடையாய் எழுந்தருளி, திரும்பி பாதி தூரம் வந்து வேகமாய்த் திரும்புவார். அருளிப்பாடு இசையறியும் பெருமாள் கூட்டத்தார்—" முதலிய மூன்று அருளிப்பாடும் ஆகி, கொட்டகையிலிருந்து ஆயிரக்கால் மண்டபமேறும் படியின் மேல் கொண்டாட்டங்களோடு படியேற்றம் கண்டருளித் திரும்பியதும், "புண்டரீக தாஸர்", "சடகோப தாஸர்" என்று சொல்வி சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு பெருமாளுடைய பட்டிலிருந்து இரண்டு நூல் லாலி ஸமர்ப்பிக்கப்படும்.

பெருமாள் மரியாதை பெற்றுக்கொண்டவுடன் மண்டபம் எழுந்தருளிய ஆழ்வாராசார்யாளுக்கு நடுவே ஆஸ்தான மண்டபமாகிய திருமாமணி மண்டபத்துக்கு நேராகட் போய் ஒய்யார நடையில் எழுந்தருளி, வேகமாய்த் திரும்பியதும் திருவந்திக் காப்பு கண்டருளி,—மேல்புறம் படிக்கட்டு ஏறி மண்டபம் சேருவார். ஆழ்வாராசார்யாளுக்கும் அரையர்களுக்கும் கொட்டகையிலேயே மரியாதை முதலியன நடந்து விட்டபடியால் மண்டபத்தில் இனி அந்தக் காரியங்கள் கிடையா.

பகல் பத்தில்போல இப்பொழுது அரையர் ஸேவை முடிந்த பிறகு அலங்காரம் அமுது செய்வதில்லை. முதலில் அலங்காரம் அமுது செய்து திரை வாங்கிய பிறகுதான், அரையர் ஸேவை ஆரம்பிப்பது இந்த உத்ஸவத்தில் வழக்கம்.

அரையர் ஸேவை முடிந்ததும் திருப்பணியார விநியோகம், திருவாராதனம், வேத விண்ணப்பம், தட்டி, வெள்ளிச்சம்பா நிவேதனம், கோஷ்டிக்கு தீர்த்தம், சடகோபம் ஆழ்வார்களுக்கும் கோஷ்டிக்கும் ப்ரஸாத விநியோகம் முதலிய ஸகல காரியங்களும் பகல் பத்தில் போலவே நடந்து ஆழ்வாராசார்யாளை ஸ்ரீ சடகோபம் ஸாதித்து அனுப்பிவிட்டு பெருமாள் புறப்படுவார். பகல் பத்தில்போல ஆழ்வார்கள் ஸ்தோத்திர பாட கோஷ்டியோடு எழுந்தருளி நடக்கும் காரியங்கள் இந்த உத்ஸவத்திலுமுண்டு.

இப்பொழுது பனி காலமாதலால் பெருமாள் ‘ கோரா ’ என்ற அதி ஸூக்ஷ்மமான பட்டால் திருமேனி முழுவதும் போர்த்துக்கொண்டு, புறப்பட்டு, ஆயிரக்கால் மண்டபம் கீழ்புறம் படிக்கட்டிறங்கி, ஒய்யார நடையில் கொட்டகை நாலுகால் மண்டபமெழுந்தருளி, அங்கிருந்து “ மல்லாரி ” என்ற நடையில் வெள்ளைக்கோபுர வாசல் நாலுகால் மண்டபம் ப்ரவேசித்து, கொட்டகையின் மேல்புறமாய் வந்து வெளியே உள்ள நடை கொட்டகையிலிருந்து விளாமிச்சம் வேர் சப்பரத்தில் எழுந்தருளுவார்.

ஸ்ரீபண்டாரம் நாலுகால் மண்டபம் தாண்டியதும், அரையருக்கு அருளிப்பாடாகி, சாற்றப்பட்டிருக்கும் ஆரியபடாள் வாசல் கதவைத் திறப்பதற்காக ‘ திரோ ’ என்று நியமித்து பெருமாள் உள்ளே எழுந்தருளியதும் ஆர்யபடாள் வாசல் சாற்றி தாள் போடப்படும்.

நாழிகேட்டான் வாசலிலும் ‘ திரோ ’ என்று அருளிப்பாடாகி அந்த வாசல் கதவு திறக்கப்பட்டவுடன் அங்கு கொண்டாட்டமில்லாமல் ஸாதா

ரணமாய் படியேற்றமாகி பெருமாள் உள்ளே எழுந்தருளியதும் அந்த வாசலும் சாற்றி தாள் போடப்படுவது வழக்கம்.

பெருமாள் உள்ளே எழுந்தருளி மேற்கு முகமாய்த் திரும்பியதும் வீணை வாத்யம்—வீணை மிராசுக்காரர் கோவிந்தஸாமி அய்யங்கார் ஆழ்வாராசாரியாளுடைய பாடல்களையும் ச்லோகங்களையும் வீணைக் கம்பிகளிற் செலுத்தி பாடும் ரஸத்தை அனுபவித்துக்கொண்டே பெருமாள் மேலப்படி எழுந்தருளுவார். இப்பொழுது படியேற்றம் வீணை வாத்தியத்தோடு நடக்கும். சாத்தாத ஸ்ரீ வைஷ்ணவர்கள் பச்சைக் கற்பூரத் தூள்களைப் பெருமாள்மேல் வாரி இறைப்பார்கள். இந்த வைபவத்துடன் பெருமாள் உள்ளே எழுந்தருளுவார். உள்ளே எழுந்தருளும் வைபவம் எப்பொழுதும் ஒரே விதமாயிருக்கும். இந்த உத்ஸவத்தில் அரையர் ஸேவை ஒரே தடவையாக நடை பெறுமே யன்றி இரண்டு தடவையாக நடைபெறுவதில்லை.

மற்றைய திருநாட்களிலும் இதே மாதிரி. தினந்தோறும் பெருமாள் மத்தியானத்துக்கு மேல்தான் புறப்படுவார். திராவிட வேதத்துக்கு அரையர்போல ஸம்ஸ்கிருத வேதத்துக்கு ஏற்பட்ட ஸ்ரீரங்கராஜ புத்திரரும் ஸ்ரீரங்கேச புரோஹிதருமான பட்டர் உள்ளே எழுந்தருளிய பிறகு ஆர்யபடாள் துவாரம் சாற்றப்படும், உடனே வேதப் பாராயணத் தளிகை யென்று ஏற்பட்ட ப்ரஸாதத்தை அமுது பாறையில் தோளுக்கினியானில் இருந்தபடியே அமுதுசெய்து பெருமாள் புறப்படுவார். இரண்டாம் திருநாள்முதல் 7, 8 தவிர மற்றைய நாட்களில் திருவாபாரணம்கூட தெரியாமல் பெருமாள் போர்வை போர்த்துக்கொண்டு புறப்பட்டு, பரமபத த்வாரம் போய் திரை ஸமர்ப்பித்து, போர்வை களைந்து மாலை சாற்றிக்கொண்ட பிறகு துவாரம் திறக்கப்படும்.

[இதன் தாத்பரியமாவது ஒரு முக்த சேதனன் ப்ரகிருதி மண்டலத்தை விட்டு அர்ச்சிராதி மார்கமாய்ப் போவதைப் பெருமாள் அநுகரித்துக் காட்டுகிறார். வேத விண்ணப்பம் நடக்குமிடம் விரஜை. "விரசைதனில் குளித்து, அங்கு அமானவனால் ஒளிக்கொண்ட சோதியும் பெற்று, அமரர் வந்து எதிர்கொண்டலங்கரித்து வாழ்த்தி வழி நடத்த—" என்று மணவாளமாமுனிகள் ஆர்த்தி 24-ம் பாட்டில் அருளிச் செய்ததுபோல தேவதைகளின் வாழ்த்துதான் வேத விண்ணப்பம். ஐச்வர்யாதிகளில் வாஞ்சை பிறவாமலிருப்பதற்காக முக்த

சேதனனைப் போர்த்து எடுத்துக்கொண்டு போவதால் பெருமாள் போர்வை சாற்றிக்கொண்டு எழுந்தருளுகிறார்.]

6-ம் திருநாள்—அஹோபில மடம் சிறப்பு—

இன்றைய செலவு முழுவதையும் முன் காலத்தில் அஹோபில மடத்தார் தேவஸ்தானத்தில் சாச்வத மூலதனமாய் ஒப்பித்திருக்கிறார்கள். கொட்டாரத்திலிருந்து அரிசி பூசணிக்காய் முதலிய ஸாமான்கள் அஹோபில மடத்துக்குக் கொண்டுபோய் வைக்கப்படும். பெருமாள் மண்டபம் எழுந்தருளித் திரை ஸமர்ப்பித்தவுடன் ரங்காசார் அண்ணங்கார்களில் முறைக்காரரும், கோயில் அத்தியாபக மிராசு பாத்தியரான தென்கலையார்களும், மணியக்காரரும் மடத்துக்குப் போய் கோஷ்டியாக எழுந்தருளியிருப்பார்கள். மடத்தார் ஸித்தமாய் வைத்திருக்கும் தேங்காய், தாம்பூலம், சந்தனம்—முதலியவற்றை ஸ்தாநீகர் எடுத்து கோஷ்டிக்கு விநியோகம் செய்வார். தேவஸ்தானத்திலிருந்து வரும் பீதாம்பரத்தை மடத்து ஸ்ரீ காரியம் ஸ்வாமி பெருமாளுடைய யானைமேல் வைத்தெடுத்துக்கொண்டு ஆயிரக்கால் மண்டபத்தில் பெருமாளை ப்ரதக்ஷிணமாய் வந்திறங்கி, பெருமாளுக்கு ஸமர்ப்பிப்பார். அவருக்கு பெருமாள் ஸேவை தீர்த்தம் ஸ்ரீ சடகோபம் முதலிய மரியாதை நடக்கும். கொட்டாரத்திலிருந்து வந்த ஸாமான்கள் யானையோடுகூடப் புறப்பட்டு வந்து கொட்டாரத்துக்கே திரும்பிப் போய்விடும்.

திருவாடிப்பூரத்தன்று ஸந்நிதியிலிருந்து அஹோபில மடத்துக்கு அலங்காரம் ஏற்பட்டிருக்கிறது. அதை அமுது செய்விக்கவேண்டிய பாத்தியம் இவ்வூரில் 'பஹுகுடும்பியார்' என்ற தென்கலையார். அன்றைக்கும் கோயில் அத்தியாபகர்கள் மடத்துக்கு எழுந்தருளி ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தனியன் தொடங்கி ஸேவை சாற்றுமுறை செய்வார்கள். கோஷ்டிக்கு தீர்த்த விநியோகம் பண்ணவேண்டியது பஹுகுடும்பியார். பூர்வம் தென்கலையாயிருந்த அஹோபில மடம் தற்காலம் மாறியபோதிலும், கோயிலுக்கேற்பட்ட தென்கலை ஸம்ப்ரதாயம் இம்மாதிரி முக்கிய ஸந்தர்ப்பங்களில் மடத்திலும் நடைபெறுகிறது.

5-ம் திருநாள் "பொலிக பொலிக" என்னும் திருவாய்மொழியில் ப்ரதிபாதிக்கப்பட்ட உடையவரின் அவதார வைபவத்தையும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்தியையும் கேட்டுக் களித்த ஆதிவண் சடகோல ஜிய்யர்

பெருமாளுக்கு சீர் விடுத்த ஐதிஹ்யம் இன்று அங்கிருந்து வரும் சிறப்பு.

இன்று பெருமாள் போர்வை சாற்றிக்கொண்டு புறப்படுவதில்லை.

சிறப்பு வந்த பிறகுதான் பெருமாள் நித்தியப்படி ஏற்பட்ட அலங்காரம் அமுது செய்வது. இன்றைய "விட்ட விமுக்காடும்" திருப்பணி யாரமும் ப்ரஸாதமாய் கொஞ்சம் மடத்துக்கு அனுப்பப்படும். அதை அங்கு பெரிய கோயில் அர்ச்சகர் அமுது செய்விப்பார். அர்ச்சகர் ஸ்தாநீகர் முதலிய கோயில் பரிகரங்களுக்கு அங்கு விநியோகம் நடக்கும்.

7-ம் திருநாள்—திருக்கைத்தல ஸேவை—.

இன்று புறப்படும்போது பெருமாள் போர்வை சாற்றிக்கொள்வதும் பரம பத வாசலில் அதைக் களைந்து மாலை சாற்றிக்கொள்வதும் கிடையாது. நித்தியப்படிபோல ஏராளமான திருவாபரணங்கள் சாற்றிக் கொள்ளாமல், 5, 6 பீதாம்பரங்களை ஒன்றின்மேலொன்றாக அடுக் காய்ச் சாற்றிக்கொண்டு மாலையும் சாற்றிக்கொண்டே புறப்படுவார். க்ரமப்படி எல்லா காரியங்களும் ஆகி பெருமாள் மண்டபம் எழுந் தருளியதும், அடுக்குக் களையப்படும். இன்று "கங்குலும் பகலும்" என்ற திருவாய்மொழியில் ஆழ்வாருடைய நாயகிபாவம் விஷயமாத லால் ஆழ்வார் நாச்சியார் திருக்கோலத்துடன் எழுந்தருளியிருப்பார். ஆழ்வாருக்குப் பெருமாள் ஸேவை ஸாதிக்கும் பாவனையாக திருக்கைத் தல ஸேவை யென்று நடைபெறும். பெருமாளைக் கைத்தலத்தில் எழுந் தருளப் பண்ணுவதற்கு வேண்டிய பந்தோபஸ்துகளை யெல்லாம் அர்ச்சகர்கள் ஏகாந்தத்தில் செய்துகொண்டு பெருமாளை மூன்று அர்ச்சகர்கள் சேர்ந்து கைத்தலத்தில் எழுந்தருளப்பண்ணி மண்ட பத்தின் முன்புறம் வருவார்கள். உள்ளே இப்படியிருக்க,

வெளியே நன்றாய் ஸேவையாவதற்காக தாஸநம்பி, மத்தாப்பூ முத லியவை ஸித்தமாயிருக்கும். கொட்டகையில் ஸேவை மரியாதை பெற்றுக்கொண்டவுடன் இன்றைக்கு ஸேவிக்கவேண்டிய 7-ம் பத்தின் முதல் பாசுரத்தையும் பெருமாளிடமே தொடங்கிய அரையர் உள்ளே நடக்கும் காரியங்களின் குறிப்பறிந்து அத்திருவாய்மொழி பாக்கி பாசுரங்களை ஸேவித்து அடுத்த திருவாய்மொழியான கங்குலும் பகலும் என்பதை ஸேவிக்க ஸித்தமாயிருப்பார். உடனே திரை வாங்கப்படும். அப்பொழுதும் அரையர் 'கங்குலும் பகலும்' என்ற பாசுரத்தை மட்டும் ஸேவிப்பார்.

இந்த வைபவம் ஸுமார் 5 நிமிஷம் நடைபெறும். உடனே திரை போட்டு மேல் காரியங்கள் திருக்கைத்தல ஸேவைக்காக ஏகாந்தப் பொங்கலென்று உத்தமநம்பி அய்யங்கார் ஸமர்ப்பிக்கும் சர்க்கரைப் பொங்கலே அமுது செய்த பிறகுதான் நித்தியப்படி ஏற்பட்ட அலங்காரம் அமுது செய்வது வழக்கம். அலங்காரம் அமுது செய்து திரை வாங்கியதும் "ஹிரணிய வதத்துக்கருளிப்பாடு" என்று அருளிப்பாடாகும்.

8-ம் திருநாள்.—வேடுபறி—

ஸந்நிதி வாசலிலேயே பெருமாள் குதிரை வாஹனத்தில் கிழக்கு முகமாய் எழுந்தருளியிருப்பார். பட்டர் எழுந்தருளியதும் வேத பாராயணத் தளிகை அமுது செய்விக்கப்பட்டு திரை வாங்கப்படும். இன்று பரமபத வாசல் வழியாய் பெருமாள் எழுந்தருளுவதில்லை யாகையால், திரை மண்டபத்தில் நடக்கும் வேத விண்ணப்பம் சந்தன மண்டபத்திலேயே நடந்து, பெருமாள் புறப்பட்டு ஆரியபடாள் வாசல் தாண்டி கிழக்கு முகமாய்த் திரும்பி, ஸ்ரீபண்டாரம் வாசல் வழியாய் மணல்வெளி எழுந்தருளுவார். இவ்வளவு நாளாய் மணல் வெளியிலிருந்த நடை கொட்டகை இன்று வேடுபறிச்கு விரோதமாயிருக்குமாதலால் பிரிக்கப்பட்டிருக்கும். பெருமாள் பூச்சாற்று மண்டபம் வரைக்கும் ஒரு தரம் ஸாதாரணமாய்ப் போய்த் திரும்புவார். பிறகு ஓட்டமாய் ஓடித் திரும்புகையில் கோணவையாளி ஆரம்பித்து ஒரு தரம் போய்த் திரும்புவார். குதிரைக்காக கொண்டுவரும் சுண்டலே ஸ்தாநீகர் அமுது செய்வித்து மணியக்காரருக்கும் உத்தமநம்பி அய்யங்காருக்கும் விநியோகம் ஸாதித்த மிச்சம் அவருடைய பாகமாய் எடுத்துக்கொள்ளப்படும். பெருமாளுக்கு பானகம் வடைப் பருப்பு அமுது செய்வார். இங்கு இவ்வளவு காரியங்களாக—இவ்வூரிலுள்ள காவல் மிராசுக்காரர்கள் யாவரும் திருமங்கை மன்னன் ஸந்நிதியில் ஸேவை மரியாதை முதலியவைகளைப் பெற்றுக்கொண்டு, திருமங்கை மன்னனோடு புறப்பட்டுப் பெருமாளிடம் வந்து சுற்றிப் பார்த்துக்கொண்டு போவார்கள். திருமங்கை மன்னன் வளைத்த வில்லில் அம்பைத் தொடுத்து அதை ப்ரயோகம் பண்ணுவதற்கு ஸித்தமாயிருப்பதாய்க் கால்களையும் மண்டி போட்டுக்கொண்டு எழுந்தருளுவார். பெருமாளும் அவருடைய பரிகரங்களும் உள்ள நிலையை அறிந்துகொண்டு போய் பரமபத வாசலில் திருமங்கை மன்னன் கத்தி, கேடயம், உடைவாள் முதலியவை தரித்து தம்முடைய பரிகரங்

களோடு வந்து பெருமாளுடைய ஸகல ஸாமான்களையும் கொள்ளை கொண்டு போனதும், இச்செய்தி யறிந்த பெருமாள் வெகுவேகமாய்ப் பின்பற்றி யோடுவார். திருமங்கை மன்னனைப் பிடிக்கமாட்டாமல் திரும்பிவந்து 'பரிமுதல் கணக்கு வாசி' என்று அருளிப்பாடாகி திருட்டுப்போன ஸாமான்கள் கணக்கிடப்படும். உடனே ஸாமான்கள் போனவிடம் பார்த்து திருடனைப் பிடித்துவரச் சொல்லி காவற்காரர்களை யனுப்ப, அவர்கள் பெருமாளுடைய வெள்ளித் தடியைக் கண்டுபிடித்து 'வெள்ளித்தடி மச்சம்' 'வெள்ளித்தடி மச்சம்' என்று சொல்லி வெள்ளித் தடியைக் கொண்டுவர, அதை ஸ்தாநீகர் வாங்கி உயரத் தூக்கிப் பிடித்துப் பெருமாளுக்குக் காண்பிப்பார். இதற்குள்ளாக பிடிபட்ட திருமங்கை மன்னனும் பெருமாளிடம் ஈடுபட்டு இப்பொழுது அஞ்ஜலி பந்தத்துடன் வருவார். அரையர்கள் எதிரில் தாளம் ஸேவித்துக்கொண்டே வருவார்கள். பெருமாள் ஸ்தாநீகர் மூலமாய்த் தம்முடைய குல்லாயையும் கோராவையும் திருமங்கை மன்னனுக்கு ஸாதித்து மரியாதை செய்ததும், "திருமொழி விண்ணப்பம் செய்வார்" என்று அருளிப்பாடு தீர்த்தம் சந்தனம், பரிவட்டம், மாலை ஸ்ரீ சடகோபம் முதலிய மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு அரையர்கள் வாடினேன் வாடி என்ற பாசுரத்தை இசையில் ஸேவிப்பார்கள். பாசுரம் முடிந்தவுடன், திருமங்கை மன்னன் பின்னால் ஒதுங்கியதும், பெருமாள் புறப்பட்டு கொட்டகைக்கு எழுந்தருளுவதற்காக கிழக்கு முகமாய்த் திரும்பி காவற்காரர்களுக்கு ஸேவை மரியாதை நடந்துகொண்டிருக்கும். பெருமாள் புறப்பட்டது முதல் அவரைப் பின்பற்றி வந்து நிற்கும் நம்மாழ்வார் உடையவர்களும் திருமங்கை மன்னனோடு சேர்ந்துகொள்வார்கள். காவற்காரர்களுக்கு மரியாதையானதும் அரையர், அழகிய மணவாளன் கூட்டத்தார், தாஸி முதலியவர்களுக்கு அருளிப்பாடு ஆகி ஆழ்வார்களுக்கு நடுவே குதிரை வாஹனத்தோடு ஒய்யார நடையில் எழுந்தருளி, திருவந்திக்காப்பு ஆனபிறகு பெருமாள் மண்டபம் சேருவார். பெருமாள் மண்டபம் சேர்ந்து திரை ஸமர்ப்பித்ததும் ஆழ்வாராசாரியர்களுக்கு பரிவட்டம், மாலை, சந்தனம், ஸ்ரீ சடகோபம் முதலிய ப்ரஸாதங்கள் ஸாதிக்கப்படும். மற்றைய காரியங்கள் வழக்கம்போல்.

9-ம் திருநாள்—

எல்லா காரியங்களும் மற்றைய திருநாட்களில் நடந்ததுபோலவே. ராத்ரி உள்ளே எழுந்தருளும்போது ஏகாந்தத்தில் வீணை வாத்யம்

கேட்டுக்கொண்டே படியேற்றமாகி பெருமாள் மேலே எழுந்தருளியதும் வீணை மிராசு பாத்தியஸ்தரான ஸ்ரீமான் கோவிந்தஸாமி அய்யங்காருக்கு தீர்த்தம், சந்தனம், பரிவட்டம், மாலை இவற்றோடு கையில் சாற்றுப்படியும் பட்டும் கொடுத்து ஸ்ரீசடகோபம் ஸாதித்து ஸேவை மரியாதையாகும். இரண்டு பேர் இருந்து பாடவேண்டியதால் அவரோடு வரும் மற்றவருக்கும் இப்படி ஸேவை மரியாதை உண்டு. நாளை பத்தாம் திருநாள் பெருமாள் உள்ளே எழுந்தருளும்போது வீணை கிடையாது.

பெருமாள் உள்ளே எழுந்தருளிய பிறகு, சின்னப் பெருமாளுக்கு சயனம் ஸமர்ப்பிக்கப்படும்.

10-ம் திருநாள்—

காலையில் நித்தியப்படிபோல திருப்பள்ளியெழுச்சி ஆகி, பொங்கலும் அமுது செய்தபிறகு சின்னப்பெருமாளை வெளியே எழுந்தருளப் பண்ணி திருமஞ்சனம், தளிகை நிவேதனம் முதலியவை ஆனதும் பெருமாள் புறப்படுவார். இன்று பெரிய அவஸரம் அமுது செய்யாமலே புறப்படுவது வழக்கம். பெரிய அவஸரம் ஸநபனத்துக்காக ஏற்பட்டதாகையால் உத்ஸவத்தின் கடைசி தினத்தில் மண்டபத்தில் அவப்ருத ஸ்நானமிருப்பதால் இன்று பெரிய அவஸர திருவாராதனம் கிடையாது. பெரிய அவஸர காலத்துக்கு ஏற்பட்ட நித்தியப்படி தளிகையை மட்டும் உத்ஸவர் புறப்பட்டு வெளியே எழுந்தருளியதும் பெரிய பெருமாள் அமுது செய்வார்.

பெருமாள் தனியாய் பல்லக்கில் எழுந்தருளும் சின்னப் பெருமாளோடு புறப்பட்டு வழக்கப்படி வேத விண்ணப்பம் முதலிய காரியங்கள் ஆகி, போர்வை களைந்து, மாலை சாற்றிக்கொண்டு, பரமபத வாசல் திறந்து வெளியே வந்ததும்,—சந்திர புஷ்கரிணி எழுந்தருளி அங்கு தீர்த்தவாரி. பெருமாள் சந்திர புஷ்கரிணி துவாரத்திலேயே எழுந்தருளியிருக்க,—அர்ச்சகர் சின்னப் பெருமாளைப் பல்லக்கிலிருந்து கையில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு, தீர்த்தத்தில் இறங்கி, கோயில் உபாத்தியாயர் பண்ணிவைக்கும் பௌரோஹித்யப்படி அவப்ருதத்துக்குண்டான காரியங்களைச் செய்து, சின்னப் பெருமாளோடு கூடவே தீர்த்தமாடி எழுந்திருப்பார். சின்னப் பெருமாளுக்கு வேறு உச்சாத்து ஸமர்ப்பித்து அவரைப் பல்லக்கில் எழுந்தருளியப் பண்ணிய பிறகு, பெருமாள் பானகம் வடைப் பருப்பு அமுது செய்வார். சின்னப் பெருமாளுடைய திருமேனி ஸம்பந்தப்

பட்ட தீர்த்தம் ஸ்தலத்தார் முதலிய ஆசாரிய புருஷர்களுக்கும், பிறகு ஸேவார்த்திகளுக்கும் விநியோகமாகும். ஸ்ரீரங்கநாராயண ஜிய்யர் முதல் சாத்தாத வைஷ்ணவர் வரைக்குமுள்ள நியதபாத்தியஸ் தர்களுக்கு மட்டும் ஸ்ரீ சடகோபமுண்டு. ஆனால், பெருமாளுக்கு இப்போது ஆஸ்தான நிலையில்லையாகையால், அவர்களுக்கு ஸ்ரீசட கோபத்தைக் கொண்டுபோய் ஸாதிப்பதில்லை. அவர்கள் பெருமா ளிடம் வந்து வாங்கிக்கொள்ள வேண்டும். பெருமாள் ஸ்ரீபாதந் தாங்குவார் தோளில் நின்ற நிலையிலிருக்க, ஸ்ரீசடகோபத்தை எழுந் தருளப் பண்ணிக்கொண்டு போய் ஸாதிப்பது இயல் கோஷ்டி ஒன் றுக்கு மாத்திரமே.

பெருமாள் கொட்டகைக்குப் போக புறப்பட்டதும், சினனப் பெருமாள் பரமபத வாசல் வழியாய் உள்ளே எழுந்தருளுவார். கொட்டகை யில் ஆழ்வாராசாரியாள் அரையர் முதலானவர்களுக்கு பெருமாள் மரியாதை நடத்தி ஆயிரக்கால் மண்டபத்தில் திருவந்திக்காப்பு கண் டருளித் திரும்பியதும், கோயில் உபாத்தியாயருக்கு கையில் பட்டுப் படி கொடுத்து, ஸேவை மரியாதை நடக்கும். துரை மண்டபத்தில் வேத விண்ணப்பம் ஆனவாறே, திருமாளிகைக்கு எழுந்தருளி, ப்ரம்ம ரத வைபவத்துக்கேற்ற அங்கி, குல்லாய், தொங்கு பரிவட்டம், முதலிய உடைகளோடு பட்டர் வந்து தண்டம் ஸமர்ப்பிக்க, 'நம் பட்டரை வீட்டில் விட்டு வா' என்று ஸ்தாநீகர் மூலமாய் மணியக் காரருக்குக் கட்டளையிட்டு பெருமாள் மண்டபம் எழுந்தருள, பட்ட ரும்கூட எழுந்தருளுவார். அங்கு பெருமாளுடைய மாலை பட்ட ருக்கு சாற்றப்படும். பட்டரை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு மணியக்காரர் திருமாமணி மண்டபத்தை ப்ரதக்ஷிணமாய் வந்து, திரைக்கு ஸமீபமாய் நிற்பார். இன்று திருமஞ்சனம் நடக்கவேண்டி யிருப்பதால், திருமாமணி மண்டபத்தின் முன் கொரட்டில் ஸமர்ப்பிக் கப்பட்டிருக்கும் திருமஞ்சன வேதியில் பெருமாளைத் தோளுக்கினி யானை விட்டு எழுந்தருளப் பண்ணி, திருவடி விளக்கிய பிறகு திரை வாங்கும்போது, உள்ளே ஏகாந்தத்தில் பட்டருக்கு ஏற்பட்ட மடத் தம்மாள் கைங்கரியத்தை பட்டருக்கு ப்ரதிநிதியாகப் பார்த்த பட்ட ருடைய சிஷ்யர் பட்டருக்கு ஸமீபமாய் வந்து பெருமாளைப் பார்த்த வண்ணமாய் 'எச்சரிகை' என்று உரத்த குரலாய் ஸாதிக்க, அர்ச்சகர் ஸ்ரீசடகோபத்தை எழுந்தருளப்பண்ணி வந்து பட்டருக்கு ஸாதிப்

பார். பட்டர் கொட்டகை போய் அங்குள்ள கேடயத்தில் எழுந்தருளுவார். ஸ்ரீபாதம் தாங்குவார் எழுந்தருளப் பண்ணுவார்கள். உடையவர் ஸந்நிதி வழியாய்ப் புறப்பட்டு வழியிலுள்ள ஆழ்வாராசாரியர்கள் ஸாதிக்கும் மாலையைப் பெற்றுக்கொண்டு தெற்கு வாசல் நுழைந்து மணியக்காரர் அரையர் பெருமாளுடைய யானை முதலிய ஸகல பரிகரங்களோடும் பூச்சக்கரக் குடை முதலிய எடுபிடி ஸாமான்களோடும் உள் திருவீதி வழியாய்த் திருமாளிகை போய்ச் சேருவார். கோயில் தாஸிகள் முத்து ஹாரத்தி யெடுத்த பிறகு கேடயத்தை விட்டிறங்கி உள்ளே போய், அரையர் தாளத்தோடு 'பல்லாண்டு' ஸேவித்த பிறகு, அரையர் மணியக்காரர் முதலிய ஸகலமான கோயில் பரிகரங்களுக்கும் ஸ்தாநீகர் மூலமாய் சந்தனம் தாம்பூலம் மரியாதை நடத்தப்படும். இந்த செலவுக்காக தேவஸ்தானத்திலிருந்தே பணம் கொடுக்கப்படுகிறது.

பெருமாள் பஹிரங்கமாய் திருமஞ்சனம் கண்டருளி திரை ஸமர்ப்பிக்கப்படும். (திருமஞ்சனத்தை விவரிக்க இங்கு இடமில்லை) பெருமாள் பஞ்சகச்சமும் யோகவேஷ்டியும் சாற்றிக்கொண்டு திருமாமணி மண்டபம் எழுந்தருளியதும் திருமஞ்சனவேதி முதலியவை அப்புறப்படுத்தப்பட்டு, திருவாராதனமாகும். உடனே அலங்காரம் அமுது செய்வித்து திரை வாங்காமலே அந்த ப்ரஸாதம் வெளியே கொண்டு போகப்படும். இதற்கு சின்ன அலங்காரமென்று பெயர். இனி பெரிய அலங்காரம் வரவேண்டும், சாற்றுமுறையாதலால் பெருமாள் பலவித திருப்பணியாரங்களை ஏராளமாய் அமுது செய்வார். தோசை, வடை, செல்வரப்பம், தேங்குழல், அப்பம், பொரி, உருப்படி, ஊய்யன், கடலையுருண்டை, எள்ளுருண்டை—ஆக இத்தனை வகை திருப்பணியாரங்கள் மொத்தம் 12,000 உருப்படி இனறு கணக்கிலேற்பட்டிருக்கிறது. இத்தனையும் பணியாரப் போட்டில் பண்ணி ஸித்தமானதும் துவஜஸ்தம்பத்தடியிலிருந்து கொண்டு மணியக்காரர் அருவாணம் என்ற தாம்பூலத் தட்டுகளையும் இந்த திருப்பணியாரக் கூடைகளையும் பெரிய 'தாஸநம்பி' பந்தங்களோடும் ஸகல விதமான வாத்தியங்களோடும் எடுக்கச் சொல்லுவார். பெரிய வைபவத்துடன் திருப்பணியாரக் கூடைகள் ஆரியபடாள் வாசலிலிருந்து கொட்டகைக்குக் குறுக்கு வழியாய் வராமல், சொக்கப்பானை கோட்டை வாசலுக்கு வெளியே போய் உடையவர் ஸந்நிதி

வழியாய் ஆயிரக்கால் மண்டபம் வந்து திருமாமணி மண்டபம் முன் கொரட்டில் விரித்திருக்கும் பாவாடையில் குவியல் குவியலாகக் கொட்டப்படும். எல்லா கூடைகளும் வந்தபிறகு, பெருமாள் அலங்காரம் அமுது செய்து திரை வாங்கி மங்களாலத்தியாகும்.

உடனே, அரையர் ஸேவை தொடங்கி திருவாய்மொழி 10-ம் பத்து "திருமாலிருஞ்சோலைமலை" என்ற 8-ம் திருமொழி முடிய ஸேவித்து நிறுத்தப்படும்.

பிறகு திருப்பணியாரங்களெல்லாம் விநியோகம் செய்யப்பட்டு, வெள்ளி சம்பா திருவாராதனமாகி தளிகை யமுது செய்து திரை வாங்கியதும் ஆழ்வார் திருவடி தொழுதல்.

இரண்டு அர்ச்சகர்கள் உடம்பைக் கையியால் போர்த்துக்கொண்டு ஆழ்வாரைத் திருக்கைத்தலத்தில் எழுந்தருளப்பண்ண, பின்புறத்தில் பெருளுடைய திருமுத்துக் குடையும் பக்கங்களில் சாமரம் திருவால வட்டங்களும் பிடிக்கப்படும். அரையர்கள் "சூழ்விசும்பணிமுகில்," என்ற திரு 10-ம் பத்து 9-ம் திருவாய்மொழியை ஸேவித்துக்கொண்டு போவார்கள். ஆயிரக்கால் மண்டபம் மேல்புறம் படிக்கட்டு ஏறி திருமாமணி மண்டபத்தைப் பிரதக்ஷிணமாய் வந்து பெருமாளுடைய திருவடிகளில் ஆழ்வாருடைய திருமுடி படிந்திருக்குமாறு ஆழ்வார் பெருமாளிடம் சேர்க்கப்படுவார். இதற்குள்ளாக 'சூழ்விசும்பணி முகில்', என்ற திருவாய்மொழி 11 பாட்டுக்களும் பூர்த்தியாய்விடும். உடனே 'முனியே நான்முகனே' என்ற கடைசி திருவாய்மொழி ஸேவிக்கப்படும். அத்திருவாய்மொழி 11-ம் பாட்டும் பூர்த்தியாகும் வரையில் அர்ச்சகர் ஆழ்வார் திருமுடியில் திருத்துழாய் ஸமர்ப்பித்துக்கொண்டிருப்பார். பாசுரங்களை ஸேவித்து முடிந்ததும், பெருமாள் தம்முடைய திருமண்டலத்திலுள்ள கஸ்தூரி திருமண்காப்பை எடுத்து ஆழ்வாருடைய திருமுக மண்டலத்திலிட்டு தம்முடைய மாலையையும் ஆழ்வாருக்கு ஸாதித்ததும், ஆழ்வார் முன்போலவே அர்ச்சகர்களுடைய திருக்கைத்தலத்தில் புறப்பட்டெழுந்தருளுவார். இப்பொழுதும் அரையர் 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' 10 பாசுரங்களையும் ஸேவித்துக்கொண்டு வருவார்கள்.

உடனே கோஷ்டிக்கு திருத்துழாய் விநியோகம். பிறகு தீர்த்தம் சடகோப விநியோகம்.

பெருமாள் புறப்படும்போது, ஆழ்வாராசாரியாள் யாவரும் புறப்பட்டு கொட்டகையில தினந்தோறும் எழுந்தருளியிருக்கிறபடியே யிருக்க, பெருமாள் புறப்பட்டு கொட்டகை நாலுகால் மண்டபம் எழுந்தருளியதும் திருத்தாழ்வரை தாஸர் படிப்பு. 'அருளிப்பாடு திருத்தாழ் வரை தாஸர்' என்று அருளிப்பாடானதும் ஜோஸியர், ஆயனுர்— இவ்விருவரில் முறைக்காரராயுள்ள யாரேனும் வந்து தீர்த்தம், சந்தனம், தொங்கு பரிவட்டம், மாலை முதலிய ப்ரஸாதங்களைப் பெற்றுக் கொண்டு பத்தடி தூரத்திலிருந்து வாழி பாடுவார். அதாவது, மணவாளமாமுனிகள் பர்யந்தமுள்ள சில ஆசாரியர்களுக்கும் கோயில் சில ஸ்தலத்தார்களுக்கும் தனித்தனியாய் வாழ்த்துக்கவி பாடி, விஜயரங்க சொக்க நாயகருக்கும் வாழி பாடி, அவர் பெருமாளுக்குச் செய்துவைத்த கைங்கரியங்களை யெல்லாம் சொல்லி, பெருமாள் ஊத்திய லோகத்திலிருந்து இங்கு வந்து இன்றைக்கும் நித்தியோத்ஸவாதிகளை அனுபவிப்பதும் விவரிக்கப்படும்.

பிறகு, கோஷ்டிக்கு தீர்த்த விநியோகமானதும், பெருமாள் ஆழ்வார்களுக்கு திருப்பரிவட்டம் முதலிய ப்ரஸாதங்கள் ஸாதிப்பார். மோஹனுவதாரத்தன்று நடந்ததுபோலவே இது நடைபெறும். ஆழ்வார்கள் புறப்பட்டு விடுவார்கள். அரையரை பட்டர்போல ப்ரம்மரதத்துக்குரிய உடைகளோடு திருமாளிகையிலிருந்து எழுந்தருளப் பண்ணி வந்ததும் "கோயிலுடைய பெருமாளரையர்" வரந்தரும் பெருமாளரையர் என்று சொல்லி அரையருக்குக் கையில் துப்பட்டா படி கொடுத்து ஸேவை மரியாதை செய்துவைக்கப்படும். உடனே ஸ்தாநீகர் மணியக்காரரைப் பக்கத்தில் நின்றுகொண்டு, பெருமாளிடம் குனிந்து அதி விநயமாய் 'நாயிந்தே ரகுநாதா' என்று கேட்க,— பெருமாள் அர்ச்சகமுகேந

"கோவணவா! கோவணவா!
ஸேவா பலம் தந்தோம்;
தீர்த்த பலம் தந்தோம்;

மேலே 'திருக்கலியாணோத்ஸவத்தை நன்ருய் நடத்தி வை.' என்று கோவணவரான மணியக்காரருக்கு நியமித்ததும் ஸ்தாநீகர் மங்களவாத்தியமென்று சொல்லுவார். எதிரில் நட்டுமுட்டு வாத்தியம் முழங்கும். பெருமாள் மேற்கு முகமாய்த் திரும்பி நாலடி தூரம் சென்றதும் அரையர் கூட வருவது கண்டு "நம்பாடுவானை வீட்டில் விட்டு வா" என்று

ஸ்தாநீகமுகேந நியமித்து எழுந்தருளுவார். பெருமாளோடு அரையரும் உள்ளே எழுந்தருளி, அங்கு சாற்றுமுறை ப்ரஸாதமாக எல்லோருக்கும் தீர்த்தம் ஸ்ரீ சடகோபம் ஆனபிறகு பெருமாளுடைய மாலைக் களைந்து அரையருக்கு சாற்றப்படும். ஸ்ரீ சடகோபத்தைத் தோளுக்கினியானிலிருந்து உள்ளே ஸிம்மாஸனத்தில் எழுந்தருளப் பண்ணி மணியக்காரருககும் அரையருக்கும் கைவிளக்கெடுத்து பெரிய பெருமான் ஸேவை மரியாதை முதலியவை ஆனதும், அரையர் பெரிய பெருமாளிடம் திருவாய்மொழியை சாற்றுமுறை செய்து, வாழித் திருநாமம் சொல்லி தாளமில்லாமல் கைத்தாளம் போட்டுக் கொண்டே மங்கலம் பாடுவார். உடனே, திருக்காப்பு நீக்கியதும் அரையர் மணியக்காரரோடு வெளியே வந்து, காப்பந்தம் பட்டையடித்து வழி விலக்குவது முதலிய உபசாரங்களோடு அரையர் நம்மாழ்வார் ஸந்நிதிக்கெழுந்தருளி அங்கு மரியாதை ப்ரஸாதங்களைப் பெற்றுக்கொண்டு திருவாய்மொழியை ஆழ்வாரிடம் சாற்றுமுறை செய்து கேடயத்திலேறி ப்ரம்மரத வைபவமாய்த் தம் திருமாளிகைக்கு எழுந்தருளுவார்.

---

## 7. இயல்பா: சாற்றுமுறை.

நேற்று மத்தியானம் புறப்பட்ட பெருமாள் இன்று உள்ளே எழுந்தருளும்போது அநேகமாய் ஸாயங்காலமாய்விடும், உடனே நேற்று ராத்திரி அமுது செய்யவேண்டிய அரவணைபால் வகையறுவை அமுது செய்ததும் இன்று காலை திருப்பள்ளியெழுச்சி தைமீத்தில் சாற்றுமுறையாயிருந்தால் பொங்கல் முதல் க்ஷீரான்னம் முடிய உள்ள எல்லா ஆராதனங்களும் நிவேதனங்களும் விரைவில் செய்து முடிக்கப்படும்.

திருவரங்கத்தமுதனாரை எழுந்தருளப்பண்ணி வருவதற்காக ஸந்நிதி வாசல் கைங்கரியபரர்களும் கோயில் மஹா ஜனம் கைங்கரியபரர்களும் போவார்கள். அமுதனார்கள் நால்வர் குல்லாய் தரித்து, இயல்பா ஸ்ரீ கோசங்களோடு புறப்பட்டு ஸந்நிதிக்கு எழுந்தருளுவார்கள். நம்மாழ்வார், திருமங்கை மன்னன், பெரியாழ்வார், முதலாழ்வார்கள் மூவர், திருமழிசையாழ்வார், உடையவர், கூரத்தாழ்வான்—ஆக ஒன்பது திருநாமங்களும் சந்தன மண்டபத்தின் தென்புறத்தில்

வரிசையாய் எழுந்தருளியிருக்க, அமுதனார்கள் எழுந்தருளியவுடன் ஆழ்வாராசாரியாளுக்கு அருளிப்பாடு இல்லாமல் பரிவட்டம் மாலை, சந்தனம், ஸ்ரீசடகோபம் முதலிய ப்ரஸாதம் ஸாதிக்கப்படும். அமுதனார் மிகுந்த வைபவத்தோடு எழுந்தருளியதும் மணியக்காரரின் நியமனத்தின்பேரில் பெருமாளுக்கு மாலை சாற்றி தேங்காய்த் துறுவல் அமுது செய்விக்கப்படும். அமுதனார்களை மணியக்காரர் உள்ளே எழுந்தருளப் பண்ணிய பிறகு அவர்களுக்கு உள்ளே நடக்கும் மரியாதை முதலிய காரியங்கள் திருநெடுந்தாண்டகத்தன்று அரையர்களுக்கு நடந்ததுபோலவே.

இயல்பா ஸ்ரீகோசத்தை வாங்கி ஸ்தாநீகர் அமுதனார்களிடம் திருப்பிக் கொடுப்பர். அமுதனார்கள் நால்வருமாய்ச் சேர்ந்து, "ஸ்ரீ சைலேச தயா பாத்ரம்" என்றது முதல் "பூதம் ஸரஸ்ய" என்றது வரைக்குமுள்ள ஐந்து தனியன்களையும் தொடங்கி "கைதை சேர்—" என்ற முதல் திருவந்தாதி தனியனையும் ஸேவித்து "வையந் தகளியா" முதல் "மண்ணும் மலையும்" முடிய முதல் திருவந்தாதி 10 பாட்டுக்களையும் ஸேவிப்பார்கள். பிறகு கோஷ்டிக்கு அமுதனார்களாலேயே தேங்காய்த் துறுவல் விநியோகம் செய்யப்படும். அமுதனார்கள் சந்தன மண்டபத்தில் ஆழ்வாராசாரியாளுக்கருகே கிழக்கு முகமாய் நின்றுகொண்டு திருமடல் முடிய உள்ள எல்லா இயல்பாக்களையும் தனியன்களோடு ஸ்ரீ கோசத்தைப் பார்த்தே ஸேவிப்பார்கள்.

உடனே பெருமாள் அலங்காரம் அமுது செய்து, கோஷ்டி விநியோகமாகி தளிகை வந்து திருவாராதனம் ஆரம்பிக்கப்படும். எப்பொழுதும் திருவாராதனத்தில் அரையர் ஸேவிக்கும் திருப்பாவைக்கு பதிலாக, இன்று ராமாநுச நூற்றந்தாதி "இருப்பிடம் வைகுந்தம்" என்ற 104-ம் பாட்டு முடிய அமுதனார் ஸேவிப்பது வழக்கம். பிறகு வேத விண்ணப்பம் தட்டி முதலிய யாவும் நடந்து பெருமாள் தளிகை அமுது செய்து திரை வாங்கியதும், மணியக்காரர் அமுதனார்களை உள்ளே எழுதருளப் பண்ணுவார். உள்ளே சாற்றுமுறை நடக்கும்.

சாற்றுமுறை க்ரமமாவது,

"இருப்பிடம் வைகுந்தம்—"
"இன்புற்ற சீலத்து—"
"அங்கயல்பாய்—"

என்ற ராமாநுச நூற்றந்தாதி கடைசியிலுள்ள சாற்றுக்களை ஸேவித்து

"பல்லாண்டு பல்லாண்டு—"

"அடியோமோடும்—" என்றது முதல் மணவாளமாமுனியே இன்னொரு நூற்றாண்டிரும்" என்ற சாற்றுமுறையை ஸேவிப்பது. ஆனால் "அடியோமோடும்—" என்றதன் பிறகுள்ள ஸர்வதேச தசாகாலே" என்பதை ஆரம்பியாமல், மணவாளமாமுனிகள் நிகமித்தருளின "இயல்சாற்று" இடையில் ஸேவிக்கப்படும்.

"நன்றும் திருவுடையோம்—" என்றது முதல்

ஊழிதோறு மூழிதோறும்—" என்றது முடிவாகவுள்ள இயல் சாற்று 8-ம் பாட்டுக்களையும் ஸேவித்து,

"ஸர்வ தேச தசா காலே—" என்று தொடங்கி க்ரமமாய்

அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ—" என்றது முடியவுள்ள சாற்றுமுறை ஸேவிக்கப்படும். இப்படி பெருமாளுடைய திருமுடிப் புறத்தில் வந்து இயல்பா ஸேவிக்கும்படியான பாக்கியத்தை அமுதனாருக்குக் கொடுத்தவர்கள் உடையவரும் கூரத்தாழ்வானுமாகையால், மணவாளமாமுனிகளின் ஆர்த்தி ப்ரபந்தத்திலுள்ள

"சீராரும் எதிராசர்—" என்ற உடையவர் வாழித் திருநாமத்தையும்;

"சீராரும் திருப்பதிகள்—" என்ற ஆழ்வான் வாழித் திருநாமத்தையும்;

"எந்தாதை கூரேசன்—" என்ற ஆதி திருவரங்கத்தமுதனார் வாழித் திருநாமத்தையும் சொல்லி சாற்றுமுறை பூர்த்தியாகும். இத்தனையும் பூர்த்தியாகும் வரையில் அர்ச்சகர் பெருமாள் திருவடியில் திருத்துழாய் ஸமர்ப்பித்துக்கொண்டேயிருப்பார். அமுதனார்கள் ஸந்நிதி வாசலில் எழுந்தருளி ஆழ்வார்களிடம் சாற்றுமுறை செய்யும் தாத்பரியமாக மேலே சொன்ன க்ரமத்தில் "இருப்பிடம் வைகுந்தம்" என்றதிலிருந்து "எந்தாதை கூரேசன்—" என்றது வரைக்குமுள்ள பாட்டுக்களை ஸேவிப்பார்கள். இப்பொழுதும் பெருமாள் திருவடியில் திருத்துழாய் ஸமர்ப்பிக்கப்படும்.

உடனே, கோஷ்டிக்கு திருத்துழாய், தீர்த்தம் ஸ்ரீ சடகோபம் முதலியவை விநியோகம் செய்யப்படும். எப்பொழுதும் 'திருவாய் முழக்கம்' என்று சொல்லி அரையருக்கு ஸாதிக்கப்படும் விநியோகமெல்லாம் 'திருவரங்கத்தமுதனார்' என்று சொல்லி அமுதனாருக்கு ஸாதிக்கப்படும்.

## "திருவரங்கம் பெரிய கோயில்"

ஸ்ரீரங்கம் கோயிலில் நடக்கும் ப்ரதி மாஸ உத்ஸவங்களையும், வைதிக காரியங்களையும், நிர்வாஹ ஊழல்களையும் வெளிப்படுத்துவதொரு அபூர்வமாயுள்ள வைதிக விஷயங்களையும் வெளிப்படுத்தும் வைதிக பத்திரிகை.

282, வடக்கு சித்திரை வீதி,
ஸ்ரீரங்கம்.

வருஷச் சந்தா
ரூ. 1—8—0.